www.tamilarangam.net



SIVADUKAL

# சுவடுகள்

A Tamil Monthly from Norway

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனிதனுக்கு...

முஹமட் அபார்

வானத்தை இறக்கிக்
கீழே வையுங்கள்
சூரியன்-
வாசற்படிக்கு வரட்டும்
நட்சத்திரங்கள் -
காலுக்குள் கிடக்கட்டும்.
நிலவு-
ஏதோ ஒரு மூலையில் உறங்கட்டும்

எத்தனை நாள்தான்
மேலே இருந்து கொண்டு
நாம்-
பெண்டாட்டியைத் துரத்துவதையும்
மனித ரத்தம் குடிப்பதையும்
இந்த வானம்
பார்த்துக்கொண்டிருப்பது.

பாவ ஆத்மாக்களைச்
சுமந்து, சுமந்து
வானம்-
நாலு முடிச்சில்தான் இருக்கிறது
அதற்குள்-
கறுத்த மனிதன்
அதைத் துண்டாட முனைகிறான்.

வானம் அறுந்து கீழே
விழுவதற்குள்
மூவரும் ஒன்றாய் சேர்ந்து
கீழே இறக்கி வையுங்கள்.



ஜிப்ரில் இருந்தால் நமக்கென்ன
மீக்காயில் இருந்தால்
நமக்கென்ன
அவர்களும் தேசத்தைக் கண்டு
கண்ணீர் வடிக்கட்டும்.
அல்லது மனிதனின்
கழிசறைத்தனத்துக்கு
காறித் துப்பட்டும்!

www.tamilarangam.net

# ஆறாவது வருடத்தில் காலடி வைக்கிறது

ஆறாவது வருடத்தில் காலடி வைக்கிறது சுவடுகள்

இந்த இதழ் சிறப்பிதழாக வெளிவந்திருக்க வேண்டியது. இதழ் வேலைகள் நடந்துகொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாகக் கணனியில் ஏற்பட்ட பழுது, இதழை நிர்க்கதியாக்கிவிட்டது. இந்த இதழில் இருக்கக்கூடிய எழுத்துப் பிழைகள் மற்றும் சிறுதவறுகளுக்கும் அதுவே காரணம். சுவடுகளில் நீண்டகாலமாக அக்கறைகொண்ட நண்பர் சிலரது உழைப்பால் இந்த இதழ் இவ்வளவிலாவது வெளிவருகிறது. இவ்விதழ் சிறப்பிதழாக இல்லாவிடினும், ஏற்கனவே நாம் குறிப்பிட்டிருந்த விடயங்கள் இந்த இதழில் இடம்பெறாவிட்டாலும், இந்த இதழ் சுவடுகளின் ஆறாவது வருடத்தின் முதலாவது இதழாகவும், சுவடுகளின் ஐம்பதாவது இதழாகவும் சிறப்புப் பெறுகிறது.

சுவடுகளின் பாதையில் இத்தனைகாலம் ஒத்துழைத்த நண்பர்கள், வாசகர்கள், படைப்பாளிகள், சக சஞ்சிகைகள் அனைவரையும் சுவடுகள் நன்றியுடன் நினைவுகூர்கிறது. எதிர்வரும் காலங்களில் இந்த ஒத்துழைப்பைத் தொடர்ந்தும் சுவடுகள் எதிர்பார்க்கிறது.

இந்த இதழ் தயாரிப்பில் இருந்த சமயம், வடக்குத் தமிழ் மக்கள்மீதான பாரிய ராணுவ நடவடிக்கை அனேக அப்பாவிகளைப் பலியெடுத்த துயரச் செய்தி கிடைத்தது. நியாயமான சமாதானம்மீது அக்கறை கொண்ட தமிழ் மக்களை இத்தாக்குதல் நிலைகுலையச் செய்துள்ளது.

ஐரோப்பிய வாசகர்கள் இதுவரை சந்தா செலுத்தியிராவிடின், உடன் சந்தாவைச் செலுத்தி உதவுங்கள். பன்னிரு இதழ்களுக்கான சந்தா 50 அமெரிக்க டொலர்கள்.

அடுத்த இதழில் சந்திப்போம்.

சுவடுகள்

## உள்ளே

2மனிதனுக்கு - முஹமட் அபார்/ 6ஓவியர் மாற்கு - சித்திரகுப்தன்/ 8இளையராஜா - கி.பி.அரவிந்தன்/ 12நேற்றுப்போல் உண்டான் - எட்கார்டோ டுறான் றெஸ்றெபோ/ 15ஒக்டோபர்1917 - சமுத்திரா/ 22வடக்கும் கிழக்கும் - வ.ஐ.ச.ஜெயபாலன்/ 24ஒஸ்லோ நிகழ்வுகள் - அபயன்/ 28கேலிச் சித்திரங்கள் - கேசவன்/ 32கடிதம் - தில்லை/ 35 பாட்டனாரின் பேரர்கள் - சிவசேகரம்/ 36நாற்சந்தி - வாசகர்கள்/ 42தலைவெட்டிய பிணம் - சோலைக்கிளி/ 45அடுப்படியிலிருந்து ஆயுதப்போராட்டம்வரை - சியாமளா/ 49மூளைகழற்றிய மனிதர் - விஜயேந்திரன்/ 56இரண்டு கதவுகள் - பஷ்றி ஏர்டிங்

www.tamilarangam.net

ஆசிரியர் குழு:
துருவபாலகர்

# நோர்வேத் தமிழர்களும் பாலஸ்தீனர்களும்

ஈழத் தமிழர்கள் தமது விடுதலைக்காக நடத்தும் போராட்டம் அடிப்படையில் நீதிக்கும் நியாயத்திற்குமானது. இதை மறுப்பவர்கள் அடிப்படையில் நீதியையும், நியாயத்தையும் மறுப்பவர்களே.

தமிழ் மக்களது துரதிர்ஸ்டம், காலத்திற்குக் காலம் சில தமிழ்க் கட்சிகளும், அமைப்புகளும் தமது குறுகிய நலனிற்காகப் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்து வந்துள்ளன. இன்றும் கொழும்புத் தமிழ்க் குழுக்கள் சில அப்பட்டமாக இவ்வாறான செயல்களில் ஈடுபட்டு வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

மறுபுறத்தில் போராட்டத் தலைமைகளின் தவறுகளும், அரசியல் அணுகுமுறைகளும் போராட்டத்தை ஒருபகுதி பின்னடைய வைத்துள்ளதும் மறுக்கமுடியாத உண்மை.

எமது போராட்டத்தில் உண்மையில் நியாயங்கள் இருந்தபோதிலும் துரதிர்ஸ்டவசமாகப் பல்வேறு காரணங்களால் சர்வதேச ரீதியாகப் போராட்டத்திற்கான ஆதரவு மங்கலாகவே உள்ளது. ஈழத்தமிழர்களின் ஈழத்தமிழர்களது போராட்டத்தின் வெற்றிக்கு உலக நாடுகளின் ஆதரவும் ஒரு பிரதான காரணியாக விளங்கக்கூடும் என்பதை நாம் புரிந்துகொள்ளவில்லையோ என எண்ணத் தோன்றுகிறது.

உதாரணமாக நோர்வே நாட்டை எடுப்பின் பாலஸ்தீன மக்களது போராட்டத்திற்கும், தென்னாபிரிக்கக் கறுப்பின மக்களது போராட்டத்திற்கும் இங்கு நிலவும் ஆதரவு அபரிமிதமானது. இத்தனைக்கும் இந்தநாட்டில் வாழும் தென்னாபிரிக்கக் கறுப்பின மக்களதோ, பாலஸ்தீன மக்களதோ எண்ணிக்கை மிகமிகக் குறைவானது. மறுபுறத்தில் நோர்வேயில் வாழும் தமிழர்களது எண்ணிக்கை ஐயாயிரத்துக்கும் அதிகமாகும். இதுதவிர, ஐரோப்பா, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலிய நாடுகள் என இரண்டுலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் பரந்து வாழ்கின்றனர். இவ்வாறு இருந்தும் எமது போராட்டத்திற்கு அடிப்படையில் பலம்தரக்கூடிய சர்வதேச ஆதரவை ஏன் குவிக்கமுடியாதுள்ளது என்பது பெரிய கேள்வியாக உள்ளது.

இந்தக் கணத்தில் நாட்டுநிலைமை காரணமாக இங்கு வாழும் எம்மவரிடையே, தாய்நாட்டின் நிலைமைகள் சீரடையவேண்டும்

நோர்வே
இலக்கிய வட்டம்,

முகவரி:
Herslebs Gate 43,
0578 Oslo

சுவடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதில் அக்கறை அற்ற போக்கே மேலோங்கியிருப்பது கவலை தரும் விடயமாகும். அடிக்கடி வெளிநாட்டு அரசாங்கங்கள் கூறுவதுபோல நாம் உண்மையிலேயே பொருளாதார அகிதகள்தானா? அல்லது தாய்நாட்டின்மீதும், அங்கு நெருக்கடிகளுக்குள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வாழும் மக்கள்மீதும் பற்றோ அக்கறையோ இல்லாதவர்கள்தானா?

இன்றைய உலக 'மாற்றங்கள்', அரசியல் பொருளாதார நல அடிப்படையில் புரிந்துகொள்ளப்பட வேண்டியவை. என்றைக்குமே சாத்தியமற்றது எனக் கருதப்பட்ட பாலஸ்தீனப் பிரச்சனைக்குத் திடீர் தீர்வு ஒன்று வந்துள்ளது. இது அந்த மக்களுக்கான உண்மையான தீர்வுதானா என்பதில் அபிப்பிராய பேதங்கள் இருந்தபோதிலும், இதன்மூலம் பாலஸ்தீனர்களது உரிமையை இஸ்ரேலுடன் சேர்ந்து அப்பட்டமாக மறுத்துவந்த நாடுகள்கூட அவர்களது பிரச்சனைகள் பற்றி அக்கறை கொள்ளவும், அவர்களுக்குப் பிரச்சனைகள் உண்டென ஏற்றுக்கொள்ளவும் ஒரு நிலைமையைத் தோற்றுவித்திருக்கிறது. இந்த ஒப்பந்தம் பாலஸ்தீன மக்களது போராட்டத்தில் வலுவான அடித்தளமாக அமையக்கூடும்.

இந்தப் புதிய இணக்கப்பாடானது ஏற்பட நடுவராக இருந்து செயற்பட்டது நோர்வே நாடாகும். உலகப்படத்தில் முக்கியம்பெற்ற ஒரு நாடாக இராவிடினும், பல நாடுகளும் அமைப்புகளும் தோல்விகண்ட இந்த முயற்சியில் நோர்வே வெற்றி ஈட்ட முக்கிய காரணம், இருதரப்பினரதும் நம்பிக்கையை நோர்வே ஈட்டியதும், குறிப்பிட்ட பிராந்தியத்தில் நடைமுறை ரீதியான அரசியல் ஆதாயம் எதையும் நோர்வே கொண்டிராததும் எனலாம்.

ஈழத்தமிழர்களது போராட்ட வெற்றிக்கு நோர்வே மக்களது ஆதரவை நாம் ஈட்டமுடியும் என நிச்சயம் நம்பலாம். தமிழர்களது உரிமைகளையும், பாதுகாப்பையும் உத்தரவாதம் செய்யும் தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதில் நோர்வே பங்கேற்கமுடியும். இதற்கு இலங்கை அரசை நிர்ப்பந்திக்கவேண்டிய தேவை ஒன்றுள்ளது.

நோர்வேயில் மாத்திரமன்றிச் சர்வதேச ரீதியில் தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரி அந்தந்த நாட்டு அரசுகளையும் மக்களையும் கோருவது, எம் அனைவரதும் கடமையாகும். இதைச் செய்யத் தவறுவோமாயின் நாம் வரலாற்றுக்குத் துரோகம் இழைத்தவர்களாகவே இருப்போம்.

சுவடுகள் 50,
புரட்டாதி'93

சந்தா:
பன்னிரு இதழ்களுக்கு
300 குறோணர்கள்

மாத இதழ்
ஸ்தாபிதம்: புரட்டாதி88

சுவடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறுபது வயதை நிறைவு செய்த ஓவியர் மாற்கு

அட்டைப்படம்: மாற்கு



தமிழ் மக்களிடையே அதிக ஆர்வம் கிடையாத துறைகளில் ஓவியம் ஒன்று. அதிலும், பார்ப்பதை அப்படியே வரையும் போக்கே ஓவியமாக எம்மில் பலராலும் கணிக்கப் படுகிறது. பார்ப்பதை அப்படியே வரையாமல், ஓவியன் பார்வையினூடாகத் தான் உணர்வதை மற்றவர்களிடம் கோடுகளினாலும் வர்ணங்களாலும் வெளிப்படுத்தலே ஓவியம். இவ்வாறு ஓவியத்தைப் படைக்கும் கலைஞர்கள் ஈழத்தமிழரிடையே மிகக்குறைவு.

ஓவியர் மாற்கு இவ்வாறான சூழலில் அரியதோர் படைப்பாற்றலுடன் திகழ்கிறார். தற்போது அறுபது வயதை நிறைவு செய்யும் இவர் தனது இருபதாவது வயதில் கொழும்பு நுண்கலைக் கல்லூரியில் இணைந்து, ஐந்து வருடகாலம் பயின்றவர். மிக எளிமையான மனிதரான மாற்கு, தன்னை வருத்தி ஓர் மாணவ பரம்பரையையே உருவாக்கியிருக்கிறார். ஓவியம், சிற்பம் என்ற இரு துறைகளிலும் ஆற்றல்மிக்க மாற்கு அவர்கள் தான் ஏனையோரை ஊக்குவித்த அளவுக்கு அவரை ஏனையோர் ஊக்குவிக்கவில்லை என்றே கூறலாம். அவரது முதலாவது ஓவிய, சிற்பக் கண்காட்சி அவரது 57வது வயதிலேயே யாழ்ப்பாணத்தில், செஞ்சிலுவைச் சங்க யாழ் பிரிவின் அனுசரணையுடன் நிகழ்ந்தது.

1958இல் 'விடுமுறைகால ஓவியர் கழக'த்தை மாற்கு அமைத்தார். பல புதிய ஓவியர்களைப் பயிற்றுவித்த இந்தக் கழகம் பத்து வருடங்களின்பின் செயலிழந்ததெனினும், 1980இல் மீண்டும் புத்துயிர் பெற்று மேலும் பல ஓவியர்களை உருவாக்கித் தந்தது. இதில் மாற்கு அவர்களது பங்களிப்பு குறிப்பிடப்பட வேண்டியது.

பெரிய பணவசதி இல்லாமலேயே அற்புதமான திறமையை வெளிக்காட்டிய






மாற்கு, தனது ஆற்றல்களை வெளிப்படுத்த வசதிக்குறைவு ஒரு பிரச்சனையல்ல எனக் கூறுபவர். 'ஓவியம் காலத்தைப் பிரதிபலிக்க வேண்டும்; அதில்தான் அதனது சமூகப் பயன்பாடு இருக்கிறது' எனக் கூறும் மாற்கு, தனது மாணவர்கள் சுதந்திரமாகப் படைப்பாற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும் என விரும்பியவர். அவரது மாணவர்கள் பலர் இப்போது ஆற்றல் மிக்க ஓவியர்களாக உருவாகி அவருக்குப் பெருமை சேர்க்கிறார்கள்.

கடந்த யூன்மாதம் 25ஆம்திகதி தனது அறுபது வயதை நிறைவு செய்யும் மாற்கு இன்னும் நீண்டகாலம் வாழவேண்டும் என்பது ஈழத்து ஓவியக்கலையில் ஆர்வம் கொண்ட அனைவரதும் விருப்பு.

**சித்திரகுப்தன்**



www.tamilarangam.net

# திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்



கி.பி.அரவிந்தன்.

இளையராஜா என்பதே பேச்சாகிவிட்டது தவிர்க்க முடியாதபடி. தமிழ்சினிமா என்னும் சாக்கடை நீரிடை விளைந்த திரை இசைக்கொசுபற்றி இலக்கிய பேனாக்கள் எழுதலாமா? இலக்கிய கனவான்களுக்கு பொத்துக் கொண்டு வந்துவிடும். சர்வதேச அரங்குவரை வந்து சேர்ந்துவிட்ட இந்த பண்ணைபுரத்து இளையராஜாவை என்ன செய்வது? இசைச்சித்திரங்களாலான 'HOW TO NAME IT' ஒலிநாடா இளையராஜாவால் வெளியிடப்பட்ட போது இப்படித்தான் ஈழத்து எழுத்தாளர் ஒருவர் சீறிச் சினந்தார்.

சிற்றிலக்கிய இதழ் வெளியிட்டு வெறுப்புற்றதால் வியாபாரப் பத்திரிகையான வீரகேசரியின் 'பத்தி' (COLOMNST) லையின் செய்நேர்த்தியாகும். நாட்டுப்புற இசையையும், சாஸ்திரிய சங்கீதத்தையும், மேலைத்தேய இசையையும் அவர் குழைத்தெடுத்த நுட்பமும், முறைமையும் அவரை இசைஞானியென அழைக்க வைத்தது. மூன்றாவது

www.tamilarangam.net

எழுத்தாளராய் அவரின் இலக்கியப்பணி விரிவாக்கம் பெற்றபோது கலை இலக்கிய படைப்புகள், துறைகள் எல்லாவற்றையும் சகட்டு மேனிக்கு வெளுத்து வாங்கி இருந்தார். 'கூரை மேலேறி கோழிபிடிக்க மாட்டாதவன் வானம் ஏறி வைகுந்தம் சென்றேன் என்றானாம்' (1) என இளையராஜாவின் இசைக்கோர்ப்பினை எள்ளிநாகையாடி இருந்தார். 'உலகத்தரத்திலான' சிறுகதைகளையே எப்போதும் படைக்குமவர் மற்றவர்களின் படைப்புகள் ஏறெடுத்துப் பார்க்கவும் தகுதியற்றது எனக் கண்டித்திருந்தார். உலகத்தரமும் தாண்டி இவர் போன்றோர் சூனியத்துள் மறைந்துபோக தம்மளவிலான சாதனைகளுடன் சிகரங்களை நோக்கி முன்னேறத்தான் செய்கின்றன தமிழ்படைப்புகள்.

இளையராஜா சினிமாவுக்கு அறிமுகமானபோது தன்னுடன் கிராமத்து இதயங்களையும், பழங்கலைகளையும் காவி வந்தார். கிராமங்களைப்போலவே அழிந்து கொண்டிருந்த இசைக்கருவிகள், மெட்டுகள், வாய்மொழிப்பாடல்கள், சொற்தட்டுகள் என்பவை இளையராஜா சகோதரங்களில் கைகளுக்கு வந்து சேர்ந்தால் அவை வாழ் நிலையை எய்தின.

இதுவரையான தமிழ்இசையமைப்பாளர்கள் சினிமாவுக்கு சங்கீதம் செய்து, அப்பிரபல்யத்தினால் மக்கள் முன்மேடைகளில் தோன்றி நிகழ்ச்சி செய்தனர். ஆனால் இளையராஜா தன் சகோதரங்களுடன் ஊருராய் மக்கள் முன் இசைத்துப் பாடி, அவர்களின் விருப்பறிந்து, அவர் தம் இசையை கற்றறிந்த அனுபவத்துடன் சினிமாவில் அறிமுகமானார். இதுவே இளையராஜாவை மற்றெல்லா இசையமைப்பாளர்களையும் தாண்டிய இசைச்சாதனக்கு வித்திட்டது எனலாம். இரண்டாவது அவரது இசைக்கஅம்சம் இசைப்பவுத்திரம், புனிதம் பற்றிய கட்டுப்பெட்டித்தனம் இல்லாமையுமாகும். தேவசங்கீதம், பாமரர் இசை என்ற பிரிப்புகளை அவர் மறுத்தலித்தார். இசை சப்தங்களின் கோர்வை; சப்தங்களின் நேரப்பிரிப்பு; சப்தங்களின் இணைப்பு என்பதை வலியுறுத்தினார். நான்காவது, இசை, இசைக்கருவிகள் பற்றிய தேடலும் படிப்புமாகும். இவையே அவரின் இன்றைய வெற்றிக்கு முக்கிய சில காரணிகளாகும்.

ஒரு தடவை சென்னையில் இருந்து வெளிவரும் 'FRONT LINE' ஆங்கில இதழுக்கான, A.S.பன்னீர்செல்வத்தின் பேட்டியின் போது 'நாயின் குரைப்பிலும் சங்கீதம் உண்டு', 'மனிதனின் காலடி வைப்பிலும் இசைச்சுருதி உண்டு' எனக் கூறியது மிகுந்த சர்ச்சையை இசைவாணரிடையே ஏற்படுத்தி இருந்தது.

'நின்னுக்கோரிவர்ணம்....' என்னும் தியாகராஜ கீர்த்தனையை காதல்/துள்ளல் பாடலாக்கியதும்; 'மரிமரி நின்னே....' யை நாட்டுப்பாடல் மெட்டுள் இணைத்ததும், கண்டு சங்கீதவிற்பனர்களும், சங்கீதப்புனிதர்களும் அசந்து போனார்கள். இளையராஜா இசையை கொச்சைப்படுத்துகின்றார் என கண்டனம் தெரிவித்தனர்.

பட்டாடையும், சந்தனப்பொட்டும், வாயில் தாம்பூலமுமாய் குளிரூட்டப்பட்ட அரங்கினுள் அமர்ந்து தாளமிட்டு தலையாட்டி ரசிக்கும் இசையை, 'வித்துவான்களின் வித்துவத்தை', புழுதிமண்தெறிக்க காலால் தாளமிட்டு ஆடும் பாமரர்க்கு எட்டச் செய்தது இசையை மலினப்படுத்தியதொன்றென அவர்கள் கருதினர். பொதுவாகவே தமிழில் பரப்பெல்லையை விரிக்கும் கலை இலக்கியம், மலினப்பட்டது. நீர்த்துப்போனது, தரமிழந்தது என்பது

அறிவார்ந்தாரின் கணிப்பு. ஆனால் அரசியலைப் போலவே 'ஜனநாயகமயமாதல்' கலை இலக்கித்திற்கும் இன்றைய தேவையாகின்றது. நவீன தொழில் நுட்பம் இதனை மேலும் துரிதப்படுத்துகின்றது. பொத்தி வைக்கப்பட்டவையும், இழிசனர் கலையென ஒதுக்கப்பட்டவையும், கும்பிப்பாட்டும், தொழில்பாட்டும், மனித உறவு வகைப்பாட்டும் நவீன பூச்சு புனைதல்களுடன் மேலெழ இளையராஜா முக்கிய காரணமென்றால் மிகையல்ல. தமற்கேயுரித்தான, குறிஞ்சிமுல்லை; நெய்தல்; திரிபுற்ற பாலை நிலங்களினதும், மக்களினதும், இசையும், பாட்டும், இசைக்கருவிகளும், மீளவும் தம் மரியாதைதையை பெறவும், தம் அடையாளத்துடன் திறனை வெளிப்படுத்தவும் இளையராஜா ஊக்கியாக இருந்தார் என்பது நாம் அறியாததாகும்.

இயைராஜாவை சினிமா மூலமே அறிந்து கணிப்பவர்களும், விமர்சிப்பவர்களும், அவரது இசைச்சித்திரங்களான, 'HOW TO NAME IT', 'NOTHING BUT WIND' ஆகியவற்றையும் ஒருதடவை கேட்கவேண்டும்.

இவ்விசை சித்திரங்களூடே இளையராஜாவை தரிசிப்பவர்கள், தற்போது மேலைத்தேய சாஸ்திரிய சங்கீதத்திற்கு 'சிம்ஃபோனிக்' அமைத்துள்ளார் என்பதை வியப்புற நோக்கார்.

ஐரோப்பாவில் தாயகம் துறந்தாரிடையே தமிழ் கலாச்சாரத்தை விற்கும் வியாபாரிகள் சிலர் கடந்த சில ஆண்டுகளாகவே 'இளையராஜா வருகின்றார்' என விளம்பரப்படுத்துவதுண்டு. அடித்து சத்தியம் செய்தும் கூறுவதுண்டு. நான் எனக்குள் சிரித்துக் கொள்வேன்.

எழுதி வழங்கிய இசைக்குறிப்புகளுக்கேற்ப பொங்கி பிரகவித்து வரும் ஒலிநாதங்களை மறித்து அணைகட்டி, வாய்க்கால் வழி ஒழுங்குபடுத்தி காற்றிடை மிதக்கவிடும் பணியில் அவரது செயல்வேகம் அதுவே உச்சம் கொண்ட ஒரு இசையாக இருந்தது. மௌனித்துப் போனேன். அதன்பின்னெல்லாம் அவரது இசையை காதால் கவனமாய் கேட்கமட்டுமே செய்கின்றேன்.

இப்போது இளையராஜா வெளிநாடுவந்து செல்கின்றார் தன்கனவின் நனவுடன், தான்படைத்த 'சிம்ஃபனி' இசைக்குறிப்பை 'றோயல்ஃபில் ஹார்மோனிக் ஆக்கெஸ்ரா' என்னும் இசைக்குழு வடிவமைப்பதை, பதிவு செய்தலை தொடக்கி வைக்கவும், கவனிக்கவும் அவர் வந்து செல்கின்றார்.

'வெள்ளை ஜிப்பாவும், வேட்டியும் அணிந்திருந்த சிம்ஃபனியின் சிருஷ்டிகர்த்தாவான 'மாயிஸ்டிரே' இளையராஜா றெக்கார்டிங் அறையில் இருந்து வெளியே வந்தார். கற்பூரம் ஏற்றப்பட்டு ஒரு தேங்காயின் மீது வைக்கப்பட்டது. தான் அணிந்திருந்த வெள்ளைக்காலணியைக் கழற்றிவிட்டு இளையராஜா கற்பூர ஒளியை தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டார். வாத்தியக் கலைஞர்கள் ஆச்சரியத்துடன் கண் கொட்டாமல் பார்த்திருக்க தேங்காய் ஸ்காட்டிடம் கொண்டு செல்லப்பட்டது. லண்டனில் உள்ள நவீன ஸ்டூடியோவில் ஒரு இந்தியச் சடங்கு நிகழ்த்தப்பட்டது....' என்று வர்ணிக்கின்றார் 'இந்தியா டுடே'யின் செய்தியாளர் நிருபா சுப்பிரமணியம்-

ஒரு ஆற்றலுடைய படைப்பாளியை சமகாலத்திலேயே இனம்கண்டு போற்றும் பாரம்பரியம்

www.tamilarangam.net

இளையராஜா சினிமாவுக்கு அறிமுகமானபோது தன்னுடன் கிராமத்து இதயங்களையும், பழங்கலைகளையும் காவி வந்தார். கிராமங்களைப்போலவே அழிந்து கொண்டிருந்த இசைக்கருவிகள், மெட்டுகள், வாய்மொழிப்பாடல்கள், சொற்தட்டுகள் என்பவை இளையராஜா சகோதரங்களில் கைகளுக்கு வந்து சேர்ந்தால் அவை வாழ் நிலையை எய்தின.

இந்திய-ஸ்ரீலங்கா உடன்பாட்டின் முன்னான மாதமொன்றில் இளையராஜாவை அவரது ஒலிப்பதிவுக்கூடமான பிரசாத்தில் சந்தித்தேன். நிதிசேகரிக்கும் இசைநிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்வதே என்நோக்கமாய் இருந்தது. அவரது தனி உதவியாளார் நண்பர் சௌந்தர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்தார். அப்போது அவரது இரண்டாவது கோர்ப்பிசையான 'NOTHING BUT WIND' ஒலிநாடா வெளிவந்திருந்தது. சினிமா இசைநிகழ்ச்சியென்றால் என்னால் வரமுடியாது என மறுத்ததுடன், கோர்ப்பிசை சித்திரத்தை நிகழ்த்த நீங்கள் ஒழுங்கு பண்ணுவீர்களானால் வருகின்றேன் என்றார். ஜெனிவா நகரில் உள்ள றோயல் ஓபேரா மண்டபத்தில் (ROYAL OPERA HALL) ஒரு இசைநிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யமுடியுமா? உதவுவீர்களா? என்ற தன்கனவையும் வெளிப்படுத்தினார். எம்மால் முடியுமா? அதற்கு மேல் பேச்சை நான் எடுக்கவில்லை. வித்துவ கர்வம், கனம் என எண்ணிக் கொண்டேன். ஆனால் அவரது இசையமைக்கும் முறைமையையும், தொழில் நுட்பங்களையும் பார்க்க நேர்ந்த போது உயர அகலத்தில் குறுமுனியான இளையராஜாவின் இசைவாமனரூபத்தை தரிசித்தேன். தான் கைப்பட

எமக்கிருந்ததில்லை. பாரதி, பாரதிதாசன் போன்று அவர்கள் மறைந்தபின் சகட்டு மேனிக்கு 100 வது ஆண்டுவிழாக்களும், சிலை திறப்புவிழாக்களும் செய்துதானே எமக்குப் பழக்கம்.

நிலமையை மாற்றுவோம். விஞ்ஞானம் விரல் நுனியில் கொண்டுவந்து தந்துள்ள தொடர்புச் சாதன வகையறாக்களினால் எம்முன், எம்வீட்டில் இசைவெள்ளத்தைப் பரப்புகிறார் இந்த இசைஞன் பண்ணைபுரத்து இளையராஜா-



லண்டனில்
சிம்ஃபனி இசைக்கோர்ப்புச் சாதனையை நிகழ்த்த இவர் எடுத்துக்கொண்டது ஒரு மாதம் மட்டும்தான். சிம்ஃபனி இசையமைத்த முதல் ஆசியரும் இவர்தான்.

www.tamilarangam.net

# நேற்றுப்போல் உண்டான்

**எட்காா்டோ டுறான் றெஸ்ற்றெபோ**

**தமிழில்: மணி**

பின்னர்,
தான் மலமுண்ணி என்று அவன் சொன்னான்
அவனுக்கு விருந்தளிக்க அனைவரும் விரும்பினர்
'அவன் நமது குடல்களைத் துப்பரவாக்குகிறான்'
என்று
பாதிரியாரின், பட்டாளத்தானின், சனாதிபதியின் மனைவியரும்
நல்ல குடல் கழுவி தேவையென ஒவ்வொருவருஞ்
சொல்லினர்.

பின்னர் நிசப்தத்தில் மிதந்து வந்தது இருள்,
இரவுப் பறவைகள், தூரத்து மின்னல்
தொழிலமைச்சரின் பாதங்களை முத்தமிட
நிசப்தமாக மலமுண்ணி மெதுவாக மேல்மாடி சென்றான்,
நேற்றுப்போல் உண்டான்
மறுநாள்,
அவனது தாஸர்கட்கு என்னவொரு அதிசயம்!
கொடும் பதைப்பு, அமைச்சர் மறைந்து விட்டார்.
அது என்னவோ மெய்தான்,
அவன் தனது கட்டிலில் இல்லை.

*எட்காா்டோ டுறான் றெஸ்ற்றெபோ இலண்டனில் . புலம் பெயர்ந்துவாழும் லத்தீன் அமெரிக்கக் கவிஞராவர்.*


www.tamilarangam.net

# இலக்கியமும் சுதந்திரமும்

இலங்கையில் தற்போது ஒரேயொரு சாகித்திய விழா - அதுவும் அரச ஆதரவில் - நிகழ்கிறது. முதல்முறையாக 1957இல் இந்த விழா ஆரம்பமானது. அரசு, கலை இலக்கிய நடவடிக்கைகளில் தலையிடுவது நல்லதல்ல. அவ்வாறு தலையிடும்போது பல பிரச்சனைகள் எழுகின்றன. பலவீனமான - ஸ்தாபன ரீதியில் ஒழுங்கற்ற ஓர் சமூகத்தைக் கொண்ட, அபிவிருத்தி குன்றிய நாட்டில், கலை இலக்கிய கலாசார வாழ்வின் முன்னேற்றத்திற்காக, நிறுவன ரீதியில் பங்கேற்கக்கூடிய, மிகப்பலம் வாய்ந்த அமைப்பு அரசு என்பதே உண்மை. மேற்படி பலவீனங்களைப் பயன்படுத்தியே அரசு அதிகாரத்தைப் பெற்றுள்ளது. ஆனால் 'கலை இலக்கியத் துறையின் முன்னேற்றத்திற்கான ஒரே அமைப்பு அரசு மாத்திரமே' என்ற தப்பெண்ணம் காலப்போக்கில் மிகக் கேடு விளைவிக்கக்கூடிய வகையில் வளர்ச்சி அடைந்துள்ளது.

காலப்போக்கில் (1971இல் கூட்டரசாங்கம் பதவியில் இருந்தபோது இது தெளிவாகியது) அரசாங்கத்தின் சாகித்திய கருத் திட்டம், பதவியில் உள்ள அரசாங்கத்தின் அரசியல் கருத்திட்டத்துடன் நிறுவன ரீதியாக மாத்திரமல்லாது கருத்தியல் ரீதியாகவும் அதிக அளவில் ஒன்றிணைவதை நாம் காணலாம். அரசின்கீழ் கலை இலக்கியத் துறைகள், பதவியில் உள்ள அரசின் பாரிய கருத்தியல் நிறுவனப் பாதிப்புகளை எதிர்நோக்குகின்றன. அதேசமயம் சாகித்திய விழாவிற்கும் (சாகித்திய நூல்களை மதிப்பிடும் சபைமீதும்) கலாசாரத்துக்குப் பொறுப்பான அமைச்சர் தனது தனிப்பட்ட செல்வாக்கைப் பிரயோகிக்கிறார். கடந்த காலத்தில் தொடர்பு சாதனங்கள் இதை அம்பலப்படுத்தின.

பல இனங்கள் வாழும் ஒரு நாட்டில், அரச கலை விழாக்கள் எடுக்கவேண்டிய உண்மையான வடிவத்தை நாம் இலங்கையில் காணமுடியாதுள்ளது. அது ஒரு சிங்கள சாகித்திய விழாவாகவே நடைபெறுகிறது.



www.tamilarangam.net

தமிழ் சாகித்திய விழா ஓர் இராஜாங்க அமைச்சினால் ஒழுங்கு செய்யப்படும் இரண்டாம் பட்சமான சிறுவிழாவாகவே நடைபெறுகிறது. தமிழ் இலக்கியத்திற்குப் பாரபட்சம் காட்டப் படுவது மாத்திரமல்ல, கலாசாரத் துறையில் இனரீதியான வேறுபாடுகளைத் தொடர்வதற்கும் இந்நடைமுறை வழிவகுக்கின்றது.

மேற்படி பிரச்சனைகளைப் பற்றி, கடந்த சில ஆண்டுகளாக இலக்கியக் குழுக்களும் சங்கங்களும் கேள்வி எழுப்பி வந்துள்ளன. இப்பின்னணியில் அரச சார்பற்ற சுதந்திரமான சுயாதீன இலக்கிய விழாவொன்றின் அவசியம் பற்றிக் கல்விமான்களும், இலக்கிய கர்த்தாக்களும் இரசிகப் பெருமக்களும், பத்திரிகைகள் வானொலி மூலமாக தமது கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். இவற்றின் விளைவே சுதந்திர இலக்கிய விழாவாகும்.

சுதந்திர இலக்கிய விழா ஒன்றினை நடத்துவது எளிதான காரியம் அல்ல என்பதை நாம் புரிந்து கொண்டுள்ளோம். கலாசாரத் துறையில் இதன் அவசியம் மிக அதிகமாகும். இந்நிலையில் விமர்சனம் செய்துவிடுவதோடு மாத்திரம் நின்றுவிட்டால் எமது சமூகப் பொறுப்புகளை நாம் தட்டிக் கழித்தவர்களாவோம். எனவே இப்பாரதூரமான கடமையைச் செய்யத் துணிந்தோம். கலை இலக்கியத் துறையில் நிலவவேண்டிய சுதந்திரம் பற்றிய புரிந்துணர்வுடன் எதுவிதக் குறுகிய குறிக்கோளையோ, இலாபம் ஈட்டும் நோக்கத்தையோ, பிரச்சாரத்தையோ, கீர்த்தியையோ எதிர்பாராமல் இந்த விழாவுக்கு அனுசரனையாக இருந்த இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்திற்கும், மதிப்பீட்டுக் குழு தேர்ந்தெடுத்த தகுதியான நூல்களுக்கு பணப்பரிசில் வழங்க முன்வந்த புத்தகப் பிரசுரிப்பாளர்களுக்கும், கலாசார அமைப்புகளுக்கும் இலக்கிய ஆர்வலர்களின் அன்பும் பாராட்டும் உரித்தாகும்.

இது ஓர் ஆரம்ப நடவடிக்கை மாத்திரமே. இலங்கையின் இலக்கிய வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு ஆரம்பித்த இந்நடவடிக்கைக்கு மேலும் மெருகூட்டி இதன் பங்காளர்களாகச் செயற்பட்டு, ஆண்டுதோறும் சிறந்த இலக்கிய விழாவாக இதனை நடத்த முன்வருமாறு, இலக்கிய கர்த்தாக்களுக்கும், விமர்சகர்களுக்கும், இரசிகர்களுக்கும் நான் அன்பார்ந்த வேண்டுகோள் விடுக்கிறோம்.

அமைப்புக்குழு,
சுதந்திர இலக்கிய விழா,
61, பழைய கொட்டாவ வீதி,
மிரிஹான, நுகேகொட, இலங்கை.


(சுதந்திர இலக்கிய விழா அமைப்புக் குழுவின் அறிக்கையில் இருந்து)

*இரண்டாவது தடவையாக நிகழும் சுதந்திர இலக்கிய விழா ஒக்டோபர் எட்டாம் ஒன்பதாம் திகதிகளில் கொழும்பு ஜோன் டி சில்வா அரங்கில் நிகழ்கிறது.*

www.tamilarangam.net

# ஒக்டோபர் 1917
## மறதிக்கு எதிராக நினைவுகளின் போராட்டமும்
## ஒரு சுயவிமர்சனமும்

சமுத்திரன்.



"போல்ஷெவிசம் பற்றி ஒருவர் என்ன நினைப்பினும் பரவாயில்லை, ரஷ்யப் புரட்சி மனித வரலாற்றில் மாபெரும் சம்பவங்களில் ஒன்று என்பதையும் போல்ஷெவிக்கின் எழுச்சி உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் மறுக்க முடியாது. வரலாற்றாசிரியர் பாரிஸ் கொம்யூனின் மிக நுணுக்கமான விவரங்களைத் தேடுவதுபோல், பெட்றோகிராட்டில் நவம்பர் 1917 என்ன நடந்தது என்பதை, மக்களுக்கு உயிர்ப்பூட்டிய அந்த சக்தியை, தலைவர்கள் எப்படித் தோற்றமளித்தனர், பேசினர், செயற்பட்டனர் என்பதை எல்லாம் அறிந்துகொள்ள வேண்டுவர்" – ஜோன் றீட் (John Reed) – உலகைக் குலுக்கிய பத்துத் தினங்கள் (Ten days that shook the world) 1919

ஆம், இது 1917 ஒக்டோபர் (புதிய கலண்டரின்படி நவம்பர்) புரட்சியை நேரில் கண்ட ஒரு அமெரிக்கச் சோஷலிசப் பத்திரிகையாளரின் வார்த்தைகள். வரலாறு மாற்றம் பெறும்பொழுது, அது

www.tamilarangam.net

உணவுப் போதாமை பல எழுச்சிகளுக்கு வழிவகுத்தது. நீண்ட, பயனற்ற யுத்தத்தினால் பல இழப்புகளைக் கண்ட ரஷ்ய இராணுவ வீரர்கள் அரசுக்கெதிராகத் திரும்பினர். கொடுங்கோலாட்சியின் எதிர்ப்புப் பலம் பெற்றபோதும் ஒரு ஸ்திரமான அரசியல் தலைமை மையமும் வழிகாட்டலும் இருக்கவில்லை அந்தக் கட்டத்தில். அப்போது போல்ஷெவிக் கட்சித் தலைவர்கள் மற்றும் புரட்சிவாதிகள் சைபீரியாவில் அல்ல, வெளிநாட்டில் இருந்தனர். மக்களின் எழுச்சிகள் உணவு, உடனடி யுத்தநிறுத்தம், முடியாட்சி ஒழிப்பு போன்றவற்றைப் பற்றி இருந்தன. உண்மையில் போல்ஷெவிக்குகளின் நேரடித் தலைமையின்றித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். ஏன், ஒருகட்டத்தில் நாட்டிற்குள்ளிருந்த போல்ஷெவிக்குகள் வேலைநிறுத்தத்தை வாபஸ் பெறமுனைந்தனர். ஆனால் தொழிலாளர்களின் எழுச்சி அவர்களையும் மிஞ்சி முன்னேறியது.

இராணுவத்திற்குள் புரட்சி வெடித்ததைக் கண்ட நிக்கொலஸ் II இறுதியில் முடிதுறக்கச் சம்மதித்தான். இதற்குமுன்னர் பெட்றோகிறாட் சோவியத் அமைக்கப்பட்டு விட்டது. இதில் மும்முரமாக ஈடுபட்டவர்கள் மென்ஷெவிக்குகளே. இந்தக் கட்டத்தில் காமனேவும், ஸ்டாலினும் சைபீரியாவில் இருந்து பெட்றோகிறாட்டிற்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் புரட்சிகர நடவடிக்கைகள் பற்றி அப்போது சிந்திக்கவில்லை. ஏற்கனவே தோன்றிவிட்ட தற்காலிக அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுப்பதே நல்ல உபாயம் எனக் கருதினர். இந்தநாட்களில் பெட்றோகிறாட் சோவியத்தில் போல்ஷெவிக்குகளுக்குச் செல்வாக்கு இருக்கவில்லை. ஸாரின் முடிதுறப்பிற்குப் பின்னர் லிபரல்வாதிகளும் மற்றைய உயர்வர்க்க அரசியற் பிரதிநிதிகளும் ஒரு மேற்கத்தைய முறையிலான குடியரசை அமைக்க முயற்சித்தனர். ரஷ்யாவின் சொத்துடைமையாளர்கள் தம் வர்க்க நலன்களைப் பேணவல்ல அரசியல் அமைப்பைத் தேடினர். பல கட்சிகளுக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பிரதமராக கெரென்ஸ்கி தெரிவு செய்யப்பட்டார். மென்ஷெவிக்குகளும் சோஷலிசப் புரட்சிவாதிக் கட்சியினரும் அப்போதைய தேவை பூர்ஷ்வா ஜனநாயகமெனக் கூறி லிபரல் தலைமையை ஆதரித்தனர்.

இந்தக் காலகட்டத்தில் பல முக்கிய சம்பவங்கள் இடம்பெற்றன. போல்ஷெவிக்குகள் மத்தியில் பலதரப்பட்ட கருத்துகள். லெனின் இன்னமும் பின்லாந்தில் இருந்தார். கெரென்ஸ்கியால் கோர்னிலோவ் என்பவர் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார். இவர் போல்ஷெவிக்குகளை நசுக்கவேண்டுமென வாதிட்டார். சில நடவடிக்கைகளையும் எடுக்க முற்பட்டார். ஜேர்மனியுடனான யுத்தத்தில் ரஷ்ய இராணுவம் தொடர்ச்சியாகப் பின்வாங்கியது. இந்தக் கட்டத்தில் கோர்னிலோவ் போல்ஷெவிக்குகளின் எழுச்சி ஒன்று இடம்பெறப் போகிறது, அதை அடக்க வேண்டும் என்ற சாக்கில்


**ஓசை**

ஐரோப்பாவில் நீண்டகாலம் வெளிவரும் கலை இலக்கியக் காலாண்டிதழ். தரமான படைப்புகளை நேர்த்தியான முறையில் தொகுத்துத் தருகிறது.

தொடர்புகள்: Oosai,/ C.L.A.L.P,/ B.P: 701 - 09/ 75425 Paris Cedex,/ FRANCE.

www.tamilarangam.net

பிரவாகமாய்ப் பாயும்போது, புரட்சியாய் மலரும்போது நேரிலே கண்ட ஒருவன், தான் கண்டவற்றை கேட்டவற்றைக் குறிப்பெடுத்தான். ஒரு புதுயுகத்தின் பிறப்பெனக் கருதப்பட்ட அந்தக் கணத்திற்காகப் பல்லாயிரக் கணக்கான சோஷலிசவாதிகள் உலகெங்கினும் காத்திருந்தனர். அந்தக் கணத்திற்கு வீரியம் மிகுந்த இயக்கத்தைக் கொடுத்த மையத்தில் - பெட்றோகிறாட்டில் நிற்கும் வாய்ப்பு ஜோன் றீட்டிற்குக் கிடைத்தது. ஆனால் றீட்டினால் சம்பவங்களைக் கவனமாகப் பார்த்துக் குறிப்பெடுத்துக் கொள்ளும் ஒரு பார்வையாளனாக மட்டும் இருந்துவிட முடியவில்லை. உணர்ச்சியுடன் அந்த வரலாற்றில் அவனும் பங்குபற்றினான். அதேநேரம் நிகழ்வுகளை நேர்மையாக விவரித்தான். பின்னர் போல்ஷெவிக் புரட்சி பற்றிப் பல நூல்கள் எழுதப்பட்டன. சோவியத் வரலாறு மேல்நாடுகளில், குறிப்பாக வட அமெரிக்காவில் ஒரு ஆய்வுத்துறையாக மட்டுமல்ல, புலனாய்வுக்குரிய அதிமுக்கிய விடயமாகவும் மாறியது.

இருபதாம் நூற்றாண்டு சோஷலிசப் புரட்சியின் யுகம் எனக் கனவுகண்ட சோஷலிசவாதிகளுக்கு போல்ஷெவிக் புரட்சி இனிய செய்தியாக வந்தது. அதுமட்டுமல்ல ஆழ்ந்த விடுதலையுணர்வு கொண்ட சகல சிந்தனையாளரும் ரஷ்யப் புரட்சியால் ஆகர்சிக்கப் பட்டனர். புரட்சியின் வெற்றிச் செய்தி காதிற்பட்டதும் தமிழ்ப் புதுமைக்கவிஞன் பாரதி, "ஆகாவென்றெழுந்தது பார் யுகப்புரட்சி" என ஆர்ப்பரித்து "இடிபட்ட சுவர்போலக் கலிவிழுந்தான் கிருதயுகம் எழுகமாதோ!" எனக் கீதமிசைத்தான். அது ஒரு யுகத்தின் பிறப்பே என்பதில் அப்போது பெருந்தொகையான சோஷலிசவாதிகளுக்குச் சந்தேகம் இருக்கவில்லை.

ஆனால் இன்று அந்த யுகத்தின் தோல்விகரமான முடிவின் பார்வையாளர்களாய் நாம் நிற்கிறோம். அந்த யுகம் முடிந்துவிட்டது. ஆனால் அந்த வரலாற்றின் முதற்பாடங்களைப் படிக்க இப்போதுதான் தொடங்கியுள்ளோம். இந்தப் படிப்பிற்கு வேண்டிய துணிவைத் தேடிக்கொண்டிருக்கிறோம். மறுபுறம் இந்தத் தோல்வியுகத்தின் வரலாற்றின் வெற்றிகளையும் அதன் செழுமையையும் மனிதநினைவில் இருந்து அழித்துவிடும் பிரச்சாரங்களுக்கோ குறைச்சலில்லை. உண்மைகளும் நாம் அறிந்திராத தகவல்களும் அலைஅலையாய், துண்டுதுண்டுகளாய்ப் படையெடுத்த வண்ணம் இருக்கின்றன. இவற்றின் "விசேடத் தொகுப்புகள்" வெகுஜனத் தொடர்புச் சாதனங்களூடாக நம்முன்னே வைக்கப் படுகின்றன.


## சரிநிகர்

*இலங்கையில் இருந்து துணிச்சலுடனும் நடுநிலையுடனும் வெளிவரும் மாதமிருமுறை இதழ். இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தினரால் வெளியிடப்படுகிறது. இப்போது நோர்வேயின் பல பகுதிகளில் கிடைக்கிறது.*

*வருடசந்தா 30 டொலர்கள். நேரடித் தொடர்புகளுக்கு:* **Sarinigar,/ 18/2, Allo Avenue,/ Colmbo 3.**


'ஸ்டாலின்' படம் பார்த்தேன். கடந்த பல வருடங்களாக நம்போன்றோர் எதிர்கொண்டுவரும் கசப்பான உண்மைகளின் ஒரு நுட்பமான சேர்க்கை. ஸ்டாலின் எனும் மனிதனின் ஆளுமையின் சிக்கலை அமெரிக்கத் திரைப்பட

www.tamilarangam.net

ரசிகர்களின் இரசனை விழுமியங்களுக்கு அமையச் சித்தரிக்க முற்பட்டவர்கள், ஸ்டாலினையும்விடப் பன்மடங்கு சிக்கலான சோவியத் வரலாற்றின்மீது ஒரு புகைத்திரையைப் போட்டுவிட்டனர். சோவியத் புரட்சியின் திசைதிருப்பலையும் அதன் இறுதி அழிவையும் பற்றிய ஒரு வரலாற்றுரீதியான விளக்கத்தைத் தேடுவோருக்கு இந்தப் படம் பதிலாக அமையலாமா? சிலர் சிலவேளை இத்துடன் திருப்திப் பட்டிருக்கலாம். ஸார் எனும் ஸ்டாலினில் இருந்து ஸ்டாலின் எனும் ஸார்வரை – இதுவே இடவரையிலான ரஷ்யாவின் வரலாறு எனும் கொச்சையான முடிவுக்குக்கூட ஒருவர் வரலாம். இவர்களுக்கு 1917 ஒக்டோபர் ஒரு அற்ப சம்பவம்; ஒரு தற்செயல் நிகழ்ச்சி; ஒரு விபத்து.

ஆனால் உலகை உலுப்பிய அந்தச் சில நாட்களின் சம்பவங்களுக்கு நாம் திரும்ப நிர்ப்பந்திக்கப் படுகிறோம். ஏனெனில் சுரண்டப்படும் ஒடுக்கப்படும் மக்களின் போராட்ட மரபுரிமை என நாம் தெரிந்துகொண்ட அந்த வரலாற்றில் பல மூடிமறைப்புகளும் பொய்களும் இடம்பெற்றிருந்தன. இதுபோலவே சீனப்புரட்சியின் வரலாறு பற்றியும் நாம் மீளாய்வு செய்ய நிர்ப்பந்திக்கப் படுகிறோம். இந்த நூற்றாண்டின் புரட்சிகளின் வரலாறுகள் எல்லாமே மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டியவைதான். இது சோசலிசவாதிகளை இன்று எதிர்நோக்கும் பாரிய சவால். இதைப் பல ஆய்வுக்குழுக்களும், தனிப்பட்ட அறிஞர்களும் ஏற்றுக்கொள்ள முன்வருவதைக் காண்கிறோம். இவர்களின் முயற்சிகள் நமக்குப் பலனளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

II

76 வருடங்களுக்கு முன் ரஷ்யாவில் ஏன் புரட்சி வெடித்தது? ஏன் அந்தப் புரட்சி முன்னெப்போதும் இல்லாதபடி உலகின் மூலைமுடுக்கெல்லாம் தாக்கங்களை ஏற்படுத்தியது? இரண்டு உலக யுத்தங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஏன் மேற்கத்திய நாடுகளிலும், ஜப்பானிலும் தொழிலாளர் இயக்கங்கள், முற்போக்குப் புத்திஜீவிகள், கலைஞர்கள் மத்தியில் சோவியத் யூனியன் ஒரு நம்பிக்கைதரும் மாற்றுமாதிரியாக விளங்கியது? எப்படி சோவியத புரட்சி ஒரு புதிய சர்வாதிகாரத்திற்கு வழிவகுத்தது? இறுதியில் ஏன் தோல்வியில் முடிந்தது? இவை பலராலும் துருவி ஆராயப்படும் கேள்விகள்.

## தமிழ் ஏடு

தமது விற்பனையைக் கூட்டுவதற்காகப் பரபரப்பான செய்திகளை வெளியிடும் பத்திரிகைகளுக்கிடையே, மாறுபட்ட ஒரு பத்திரிகை. மாதம் ஒருமுறை வெளிவருகிறது.
தொடர்புகள்: Tamil Edu,/ Postfach 37,/ 3700 Spiez, SWITZERLAND.

1917 பெப்ரவரி மாதம் ரஷ்யாவில் இடம்பெற்ற ஜனநாயகப் புரட்சி ரஷ்ய முடியாட்சியின் வீழ்ச்சியைப் பறைசாற்றியது. பெப்ரவரிக் கடைசி வாரத்திற்கும் மார்ச் முதல் வாரத்திற்கும் இடையே பரவலான மக்கள் எழுச்சிகள், ரஷ்ய இராணுவத்தில் சிப்பாய்க் கலகம், சில குழுக்களின் அரசியல் நடவடிக்கைகள் இப்படியாகப் பல சம்பவங்கள் இடம்பெற்றன. இவை எல்லாமே ஒரு நோக்கிற்குப் பல வகையில் உதவின; நிக்கொலஸ் IIஇன் முடிதுறப்பிற்கு வழிவகுத்தன. பெப்ரவரி 23ஆம் திகதி சர்வதேச மகளிர்தினம் ஒரு பாரிய தெரு ஊர்வலமாக மாறியது. இன்னொரு புறம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## A DECADE OF CONFLICT
## SRI LANKA 1983 - 1993

தமிழ் மக்கள்மீது அரசின் திட்டமிட்ட இன அழிப்பு வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்ட 1983 யூலையின் பத்தாண்டு நிறைவைக் குறித்து, தென்னாசியத் தொடர்பகம் (South Asia bureau) வெளியிட்டுள்ள சிறு கையேடு. கடந்த பத்தாண்டுகளில் இலங்கை இனப்பிரச்சனையின் வரலாற்றை எளிதாக விளக்கும் வகையில் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது. அரிதான புகைப்படங்களும், சேரனின் கவிதைகள் சிலவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பும் சிறப்பான முறையில் அமைந்துள்ள இந்த நூலின் (ISSN 0933-5196) விலை ஆறு (அமெரிக்க) டொலர்கள்.

தொடர்புகள்: Sud Asien Buro,/ Grosseheimstr 58,/ D-44137 Dortmund,/ Germany. (Tel: 231/136633, Fax: 231/813371)

---

பெட்றோகிறாட்டை நோக்கிப் படைகளை நகர்த்தினார். இந்தக் கட்டத்தில் கெரென்ஸ்கி அவரைத் துரோகி எனக் கூறிப் பதவி நீக்கம் செய்தார். ஆனால் கோர்னிலோவின் படைகள் ரயில்மூலம் பெட்றோகிறாட்டை நோக்கி வந்தன. அப்போது ரயில்வேத் தொழிலாளர்கள் படைகளை நிறுத்தி அவர்கள் பெட்றோகிறாட் செல்லமுடியாதவாறு தடுத்தனர். செப்டம்பர் 12ஆம் திகதி லெனின் பின்லாந்தில் இருந்து ரஷ்யாவில் உள்ள போல்ஷெவிக்குகளுக்கு ஒரு செய்தி அனுப்பினார். "இப்போது நாம் அதிகாரத்தைக் கைப்பற்றாவிடில் வரலாறு நம்மை மன்னிக்காது" என எழுதிய அவர் தற்காலிக அரசு எதிர்ப்புரட்சிகர அரசாக மாறிவிட்டதென விளக்கி, ஆயுதப் போராட்டம் மூலம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் வேளை வந்துவிட்டது என விளக்கினார். ஏற்கனவே தொழிலாளர் அமைப்புகள் ஆயுதங்கள் ஏந்தத் தொடங்கிவிட்டன. இராணுவ வீரர்கள் பலர் இவர்களுடன் இணைந்தனர்.


நிலமற்றவர்களுக்கு நிலம், தொழிலாளர்களுக்கு உரிமைகள், உணவு, யுத்தத்திற்கு முடிவு, இப்படியே பல கோரிக்கைகள். படிப்படியாக போல்ஷெவிக்குகள் சோவியத்துக்களில் பலம் பெற்றனர், அதிகாரத்தையும் பெற்றனர். ஒக்டோபர் 7ஆம் திகதி லெனின் மாறுவேடத்தில் தலைநகருக்குள் பிரவேசித்தார். ட்றொட்ஸ்கி (Trotsky) பின்னர் குறிப்பிட்டார் - 'லெனின் இல்லாமல் ஒக்டோபர் புரட்சி இடம்பெற்றிருக்க முடியாது'. ஆயினும் போல்ஷெவிக் கட்சிக்குள், புரட்சியைச் செய்வதா இல்லையா என்பதுபற்றி முரண்பாடுகள் ஏற்பட்டன. உடனடிப் புரட்சி என்பது லெனினின் வாதம். அவருடைய கருத்தில் போல்ஷெவிக் கட்சி புரட்சியைச் செய்யவேண்டும், அது தொழிலாள வர்க்கப் புரட்சி. ஒரு தொழிலாள வர்க்க சர்வாதிகாரத்தை அமைக்கவேண்டும். சோஷலிசமே இந்தப் புரட்சியின் குறிக்கோள். இதுவே லெனினுடைய நிலைப்பாடு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ட்றொட்ஸ்கி பல வருடங்களாக - குறைந்தது 10 வருடங்களாக - லெனினுடைய கருத்துகளை விமர்சித்து வந்தவர். ஒரு முன்னணி அமைப்பான கட்சி (Vanguard party) புரட்சியின் வழிகாட்டியாக இருப்பதை நீண்ட காலமாக ட்றொட்ஸ்கி ஏற்றுக்கொள்ளவில்லை. நீண்ட விவாதங்களின் பின் 1917 ஆகஸ்ட்டிலேயே ட்றொட்ஸ்கி கட்சியில் சேர்ந்தார். அந்தக் கட்டத்தில் லெனின் ட்றொட்ஸ்கியின் முன்னைய கருத்துகள் சிலவற்றுடன் ஒத்துப்போனார். 1917இல் ட்றொட்ஸ்கி புரட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரானார். பெட்றோகிறாட் சோவியத்தின் புதிய தலைவரானார். அவருடைய பேச்சாற்றலும், ஆளுமையும் மக்களைக் கவர்ந்தன. இதனால் அவர் ஒரு வெகுஜனத் தலைவராக ஏற்றுக்கொள்ளப் பட்டார். ஒக்டோபரில் அவருடைய தலைமையில் உருவாக்கப்பட்ட இராணுவப் புரட்சிச் செயற்குழு (Military Revolutionary Council) புரட்சியின் நடைமுறையாக்கலில் ஒரு முக்கிய சக்தியாக விளங்கியது. லெனினுடைய கருத்துடன் காமனேவ், சியனோவியேவ் ஒத்துப்போகவில்லை. புரட்சியைத் தாமதிக்கவேண்டும் என்பது அவர்களது நிலைப்பாடு. இதை அவர்கள் கட்சிக்கு வெளியேயும் சொல்லிச் சில கட்சி இரகசியங்கள் பரகசியங்களாக மாறின. இதனால் போல்ஷெவிக்குகள் புரட்சி செய்யப்போகிறார்கள் என்ற செய்தி தற்காலிக அரசாங்கத்திற்கும், மற்றைய கட்சிகளுக்கும், இராணுவத்திற்கும் தெரியவந்தது.

இவையெல்லாம் அந்த நாட்களின் குழப்பமான நிலைமைகளைப் பிரதிபலித்தன. ஆயினும் இறுதியில் புரட்சி வெற்றி பெற்றது. சோவியத்துக்களுக்கே சகல அதிகாரமும் எனும் சோஷலிச





ஜனநாயகக் கோஷம் புரட்சியின் தொனியாக விளங்கியது. போல்ஷெவிக் கட்சிக்குள்ளேயும், வெளியேயும் விவாதங்கள் தொடர்ந்தன. ஒரு புதிய சமூகம் தோன்றுவதற்கான அறிகுறிகள் நன்றாகவே தெரிந்தன. ரஷ்ய சொத்துடைமையாளர்கள் அமைக்க முயன்ற பூர்ஷ்வா அரசியல் அமைப்பைத் தள்ளி வைத்து முன்னேறிய பாட்டாளி வர்க்க மக்கள் அலை ஒரு உயர்ந்த ஜனநாயக அமைப்பைத் தேடியது. விவசாயிகளுக்கு நிலம், பெண்களுக்கு உரிமை, தொழிலாளர்களுக்கு முகாமை அதிகாரம், பொதுமக்களுக்கு அடிப்படைச் சுதந்திரங்கள் இவை பற்றிய விவாதங்கள் வெளிப்படையாக நடைபெற்றன. லெனின் கட்சிக்குள்ளே இத்தகைய விவாதங்களை ஊக்குவித்தார்.

எல்லா விவாதங்களுக்கும் அடிப்படையான ஒரு விவாதம் பிறந்தது. அதுதான், ஒரு பின்தங்கிய நாடான சோவியத் யூனியனில் எப்படி ஒரு சோஷலிச பொருளாதாரத்தையும் சமூகத்தையும் கட்டி எழுப்புவது என்ற கேள்வியாகும். இதுவே போல்ஷெவிக் கட்சிக்குள் சோவியத்தின் தொழில்மயமாக்கல் விவாதமாக உருவெடுத்தது. துரதிர்ஷ்டவசமாக இவ்விவாதங்களின் ஆரம்ப கட்டத்திலேயே லெனின் காலமாகிவிட்டார்.

(தொடரும்)

www.tamilarangam.net

# அந்தக் கட்டுப்பாடு!



நோர்வேயில் திரைப்படங்களுக்குச் செல்லும் பார்வையாளர்களுக்கான வயதுக் கட்டுப்பாடு பற்றிப் புதிய சர்ச்சை எழுந்துள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள வயதுக் கட்டுப்பாட்டு விதி 1987இல் நடைமுறைக்கு வந்தது. இதன்படி, ஐந்து, பத்து, பதினைந்து, பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோர் பார்க்கக்கூடிய படங்கள் என நான்கு வகையாகப் படங்கள் பிரிக்கப் படுகின்றன. முதலிரு (5, 10) வயதுப் பிரிவுகளுக்கும், வயதுகூடிய ஒருவருடன் செல்ல அனுமதி உண்டு. ஆனால் பதினைந்து, பதினெட்டு வயதுக் கட்டுப்பாடு இருப்பின் அந்தப் படத்திற்குக் குறிப்பிட்ட வயதுக்குக் குறைந்தோர் எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப் படுவதில்லை.

இந்த விதிகள் தற்போது ஓடிக்கொண்டிருக்கும் 'யுராஸிக் பார்க்' என்ற திரைப்படத்தால் புதிய சர்ச்சைக்கு உள்ளாகியுள்ளன. இந்தப் படத்தில் பாரிய டைனசோர்களின் தோற்றம் மற்றும் அவற்றின் தாக்குதல்கள் ஐந்து வயதினரும் பார்க்கக் கூடியதாக உள்ளன. அவ்வாறு பார்க்க அனுமதி வழங்கப் பட்டிருப்பது தவறு எனத் திரைப்படம் தொடர்பான பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தமிழ்ப் படங்களில் இடம்பெறும் வன்முறைகள் காரணமாக அவற்றின் வீடியோப் பிரதிகள் பொதுவாக இங்கு பத்து, பதினைந்து வயதுப் பிரிவினருக்கே அனுமதிக்கப் படுவது குறிப்பிடத் தக்கது.

*– மாயவன் –*



www.tamilarangam.net

# வடக்கும் கிழக்கும் ஒரு சந்திப்பு

வ.ஐ.ச.ஜெயபாலன்

கோடை தொலைகிறது.
கூதிர் வருகிறதில்
மரங்கள் பேதலித்து
மயிர் பிய்த்து எறிகின்ற காலம்.

ஒஸ்லோ நகர்த்தெருவில் நடக்கையிலே
கிழக்கிலங்கைத் தமிழன் ஒருவனை நான்
சந்தித்தேன்.

'ஹய்' என்று வாழ்த்தி தலை அசைத்தேன்.
பதிலுக்கு தலை அசைத்து யாழ்ப்பாணமா
என்றான்.

ஆம் என்றேன்.

"மேல் நாட்டில் நான் காணும்
பத்துத் தமிழ் இளைஞர்களுள்
பதினொருபேர் யாழ்ப்பாணம்.
நாட்டிலோ தலைகீழாய்."
மெல்லச் சிரித்தான்.

நானும் சிரித்தபடி
ஊர்ப்புதினம் வினவும் தொனியில்
வீட்டுக் கடிதங்கள் வருகிறதா எனக்கேட்டேன்.

www.tamilarangam.net

"வருகிறது...
சிங்கங்கள், புலிகள்
சிலசமயம் ஒட்டகங்கள்
வந்து நமது ஊர்களைச் சுட்டுண்கின்றது."
அவனுடைய பெருமூச்சில்
ஆகாயம் தீப்பற்றும்.

"எல்லோரும் மிதித்து நடந்து செல்ல
நம்முள்ளும் சிக்கி
தெருப்புல்லாய் நசிகின்றோம்."
உதறிவிட்ட பன்றிமுள் வார்த்தை அது.

துணுக்குற்றேன்.

"மீனைப்போல் கைநழுவக் கைநழுவ
உயிர்பற்றி
நான் தப்பிவந்த கதையே பெரும்காதை."
சற்றுத் தரித்தான்.

சலசலத்து இலை உதிரும்.

"அயலூரின் முஸ்லீம்களாலே
காப்பாற்றப்பட்ட தமிழர்களுள் நான் ஒருவன்."

"எந்தவூர்?"

"நிந்த ஊர்....."
இனங்களதும் மதங்களதும் தேசத்தில்
மனிதரின் ஊர்."
நன்றிக் கடல் பெருகி
கண்ணோரம் கரை உடைக்க
விடைபெற்றுத் தலை மறைந்தான்.

வாழிய அச்சிற்றூர்
வளர்க அங்கு செந்நெல்லும்
மனிதநேய விதைப்பயிரும்.



www.tamilarangam.net

# கோடையும் ஒஸ்லோ நிகழ்வுகளும்

◆ அபயன் ◆



கோடைவிடுமுறை தமிழர்களுக்கு ஒரே கொண்டாட்டம்தான். பல கலைநிகழ்வுகள் கோடையிலேயே நிகழ்கின்றன. இதற்கு முக்கிய காரணங்கள் சில உண்டு. கோடை விடுமுறையில் பலர் வேலைதேடி ஒஸ்லோவுக்குப் பிற இடங்களில் இருந்து வருவது, விடுமுறையைக் கழிப்பதற்கு ஏனைய இடங்களில் இருந்து தமது நண்பர்களிடம் பலர் வருவது, வெளியே சுதந்திரமாக உலவக்கூடிய காலநிலை, பலரும் (முக்கியமாக மாணவர்கள்) விடுமுறையில் இருப்பதால் கலாபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரம் கிடைப்பது என்பன இவற்றிற் சில.

முன்னரிலும் பார்க்க இவ்வருடம் அதிக நிகழ்வுகளால் கோடை களைகட்டி இருந்தது. கிறிக்கெட், உதைபந்தாட்டம், மெய்வல்லுனர் போட்டிகள் மற்றும் பலதரப்பட்ட கலைநிகழ்வுகள் என இவ்வருடம் அதிகளவில் நிகழ்ந்தன.

கடந்த வருடம் தமிழ்ச் சங்கத்தால் தொடங்கப்பட்ட மெய்வல்லுனர்ப் போட்டிகள் இம்முறை சிறப்பாக நிகழ்ந்தன. தமிழ்ச் சங்கத்தினர் இம்முறை அதிக சிரத்தை எடுத்துத் தமது ஆண்டுவிழாவை நடத்தினர். சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப் பட்டிருந்தது.

பெரிய செலவில் நடத்தப்பட்ட இந்த விழாவின் முக்கிய அம்சமாக இருந்தது, சுந்தரலிங்கம் அவர்கள் எழுதிய அபத்த நாடகமான 'அபசுரம்'தான். இங்கு மேடையேறியுள்ள பல நல்ல நாடகங்களை நெறிப்படுத்திய சர்வேந்திரா இதனை நெறிப்படுத்தியிருந்தார்.

'அபசுரம்' இலங்கையில் பல தடவைகள் மேடையேற்றப் பட்ட ஒரு நாடகம். தமிழில் அபத்த நாடகங்கள் மிகக்குறைவே. தரமான நாடகங்களைப் பார்த்துப் பயிற்சி பெற்ற பார்வையாளர்களாலேயே இந்தவகை நாடகங்களை ஒன்றித்துப் பார்க்கமுடியும். மேடையில்

www.tamilarangam.net

முக்கிய பாத்திரங்களை ஏற்று நடித்தவர்கள் தமது பயிற்சியினை ஒழுங்காக மேற்கொண்டிருந்தனர் என்பதை நாடகம் நிரூபித்தது. ஆனால் நாடகம் சொல்லவந்த விடயம் எத்தனைதூரம் பார்வையாளர்களால் விளங்கிக்கொள்ளப் பட்டது என்பதும், எத்தனைபேர் நாடகத்தை ஒன்றிப் பார்த்தனர் என்பதும் கேள்விக்குரிய விடயங்கள். சரியான ஒலியமைப்பின்மையும் பார்வையாளரை நாடகத்தில் இருந்து அந்நியப் படுத்திவிட்டது. வழமை போலன்றி, நாடகம் நிகழும் வேளையில் சபையில் இருந்த அமைதியின்மை இதற்கு நல்ல சான்று. பலரது நேரத்தையும் உழைப்பையும் விழுங்கி உருவாகும் இவ்வாறான படைப்புகள் சரியாகப் பார்வையாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாவிடில், உழைப்பும் அர்ப்பணிப்பும் வீணாகிவிடும், அதுவும் ஒரேயொரு தடவை இவை மேடையேற்றப் படுவதால் பலர் பார்க்கும் சந்தர்ப்பமும் இல்லை. எனவே பொதுவாகப் பலரால் இலகுவில் விளங்கி, ஒன்றித்துப் போகக்கூடிய பிரதிகளை மேடையேற்றுவது அவசியம்.

'அபசுரம்' போன்ற நாடகங்கள் இலங்கையில் மேடையேறும்போது அதை வந்து பார்ப்பவர்கள் பெரும்பாலும் நாடகத்துடன் ஈடுபாடும், நல்ல நாடகங்களில் பயிற்சியும் உள்ளவர்களாகவே இருப்பர். அதனால் நாடகம் சரியான பார்வையாளர்களையே அடையும். ஆனால் இங்கு, நெருக்கடிகள் நிறைந்த, ஓய்வுக்குப் பொழுது போக்குவதற்காகவே பெரும்பாலும் நிகழ்ச்சிகளுக்கு வரும் பார்வையாளர்களிடம் ஒரு 'சீரியஸ்' நாடகம் எடுபடுமா என்பது சந்தேகமே. எவ்வாறாயினும் நல்ல நாடகத்தை மேடையேற்ற வேண்டும் என்ற ஆர்வம் பாராட்டப்பட வேண்டியது.

இந் நிகழ்ச்சியில் புதிய இசைக்குழு யாழிசை என்ற பெயரில் இசை வழங்கியது. புதியவர்கள் என்பதால் சில குறைகள் இருப்பினும், எதிர்காலத்தில் நல்ல இசைக்குழுவாக இவர்கள் விளங்குவார்கள் என நம்ப இடமுண்டு. ஆரம்பத்திலேயே ஒரு இசைக்குழுவிடம் முழு நேர்த்தியைக் காணமுடியாது. ஆனால் தமது நிகழ்ச்சி பற்றிய விமர்சனங்களை உள்வாங்கி, அக்குறைபாடுகளைத் திருத்தினால் எதிர்காலத்தில் நல்ல இசைக்குழு ஒன்று நோர்வேத் தமிழர்களுக்குக் கிடைக்கும்.

அடுத்ததாக வருடாந்தம் விடுதலைப் புலிகள் நடத்திவரும் 'சுதந்திர தாகம்' நிகழ்ச்சி. ஒஸ்லோ நிகழ்வுகளிலேயே இதனைப் பிரமாண்டமான நிகழ்ச்சி எனக் குறிப்பிடலாம். பலரை ஒருங்கிணைத்து நீண்டகாலப் பயிற்சிகள் மேற்கொண்டு இந்த நிகழ்வை அரங்கேற்றுகின்றனர் விடுதலைப்புலிகள். இந்த நிகழ்வில் ஏறத்தாழக் கடந்த வருடத்திற்கும் இவ்வருடத்திற்கும் அதிக வேறுபாட்டைக் காணமுடியாது, ஏறத்தாழ ஒரே பாணியிலான நிகழ்வுகள்.

இவ்வருடம் விடுதலைப் புலிகளின் வடபகுதித் தளபதியாக இருந்த கிட்டுவின் ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன. தத்ரூப, தாக்க, நவீன ஓவியங்கள் எனப் பலவகையான ஓவியப் பாங்குகளை அவை கொண்டிருந்தன. குறைந்தளவு ஓவியங்களே காட்சியில் வைக்கப் பட்டிருந்தன என்றபோதும் அவை பன்முகப் பட்டவையாக இருந்தன.

கிட்டுவின் வெவ்வேறுவகை ஓவியப் பாணி வரவேற்கப்பட வேண்டியதே. இவர் நீண்டகால ஓவியராக இல்லாதிருப்பினும், ஓவியங்கள் குறுகியகாலத்திலேயே அடைந்த வளர்ச்சியைக் காட்டின. இவர் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஓவியங்களைப் படையாமல் விட்டிருந்தாலும், இவரது ஓவியங்களைக் காட்சிக்கு வைத்தமை வரவேற்கப்பட வேண்டியதே. காரணம், எமது சமூகத்தில் கலை வளர்ச்சியும், ஈடுபாடும் குறைந்த நிலையில் உள்ளது வருந்தத்தக்க விடயம். அதிலும் ஓவியம் பற்றிய ஈடுபாடு மிகக் குறைவே.

www.tamilarangam.net

கிட்டுவின் ஓவியங்கள் எனப் பிரபலப் படுத்துவதால் அனேகர் அதில் ஈடுபாடு கொண்டு அவற்றைப் பார்க்க வருவர். இவ்வாறான முறையில் ஓவியங்கள்மீது ஈடுபாட்டை வளர்க்க முடியும் எனில் அது நிச்சயம் வரவேற்கப்பட வேண்டியதே.

அடுத்து முக்கிய அம்சம், புலிகளின் வழமையான நிகழ்ச்சிகளில் மக்களுக்காகப் போராடி மறைந்த ஏனைய அமைப்புகளின் போராளிகளுக்குப் போராளிகள் என்ற ஸ்தானம் மறுக்கப்பட்டே வந்தது. இம்முறை முன் நுழைவாயில் மண்டபத்தில் 83யூலை வெலிக்கடைப் படுகொலைகளில் உயிரிழந்த 53 பேரையும் நினைவுகூர்ந்து மலரஞ்சலி வைக்கப் பட்டிருந்தது. அதிலும் குறிப்பாகக் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் ஆகியோரின் படங்கள் பெரியளவில் வைக்கப்பட்டு அஞ்சலி செய்யப் பட்டிருந்தது. இதைப் பார்த்த சிலர், இந்த மாற்றம் நல்லதொன்று எனக் குறிப்பிட்டு, இந்தப் போக்குத் தொடரவேண்டும் எனப் பேசிக்கொண்டனர். புலிகளிடத்தில் பல மாற்றங்களை வேண்டிநிற்கும் மக்களுக்கு இது ஒரு ஆறுதல் தரும் அறிகுறியாகவே இருக்கும்.

புலிகளின் நிகழ்ச்சிகளில் அதிக நேரத்தை எடுத்து முக்கியத்துவம் கொடுத்து நிகழ்த்தப் படுவது நாடகமே. இம்முறை நிகழ்த்தப்பட்ட நாடகம் வழமையான புலிகளின் நாடகப் பாணியிலேயே இருந்தது. இதில் பயன்படுத்தப்பட்ட பாங்குகளும், குறியீடுகளும் ஏற்கனவே பாவிக்கப் படுபவைதான். இதனை மாற்றி அமைத்திருக்கலாம். அதைவிட நாடகம் ஒருமணி நேரத்திற்கு மேல் நீண்டிருந்ததும், சொல்லவேண்டிய விடயத்தைச் சுருக்கமாகச் சொல்லாமல் நீட்டி முழங்குவதாக அமைந்ததும் பல பார்வையாளர்களுக்கு ஒரு சோதனையே. பல நிகழ்வுகள் வந்து கலந்து, முக்கிய விடயம் எது என்பதையே கிட்டத்தட்ட மறைத்துவிட்டன. இதனால் பார்வையாளர்கள் பலரும் சோர்வடைந்துவிடுவர். இதனை எதிர்வரும் காலத்தில் மாற்றப்படக் கூடியது.

இம்முறை நாடகம் ஒளியமைப்பிற்கு முக்கிய கவனம் செலுத்தப் பட்டிருந்தது, நாடகத்திற்குச் சிறப்புச் சேர்த்தது. அத்துடன், நாடகம் ஏராளமான பாத்திரங்களைக் கொண்டது. ஐரோப்பியச் சூழலில் இத்தனைபேரை இணைத்து, பயிற்சி வழங்கி ஒரு மேடையேற்றத்தினை நிகழ்த்துவது இலகுவான காரியமல்ல. அந்தவகையில் இம்முயற்சி வெற்றியையே தந்துள்ளது எனக் கூறலாம்.

இம்முறை முதலாவது தடவையாக புலிகளல்லாத வேறு ஒரு அமைப்பினால் அரசியல் சார்ந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. தமிழர்களுக்கான நோர்வேஜிய ஆதரவுக்குழுவின் முன்னோடிச் செயற்குழு 1983 யூலைப் படுகொலையின் பத்தாண்டை நினைவுகூர்ந்து 'பத்துவருடக் கண்ணீர்' என்ற நிகழ்வை ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

தாய்நாட்டின் வன்முறைகளும் அழிவுகளும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிடையே சாதாரண நிகழ்வாகவே கருதப்படும் ஒரு அபாயநிலை நிலவுகிறது. இந்நிலையில் பத்துவருடங்கள் முன்னதாக நிகழ்ந்த அனர்த்தங்களை நினைவுகூர்ந்து, உடனடியாக மக்களது துயரங்கள் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு இது என அமைப்பாளர்கள் கூறினர்.

புகைப்படக் கண்காட்சி, நாடகம், நோர்வே மக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் விடுக்கப்பட்ட மனிதாபிமான வேண்டுகோள், கலந்துரையாடல் என்பன இந்த நிகழ்வின் முக்கிய அம்சங்கள்.

புகைப்படக் கண்காட்சி நாட்டின் முக்கிய துயரநிலையை முற்றாக வெளிக்கொணர முடியாவிடினும், சில முக்கிய படங்களைக் கொண்டிருந்தது. எனினும் இந்தப் புகைப்படக் கண்காட்சியில் பல குறைபாடுகள் இருந்தன. படங்கள் சரியான முறையில் தொகுக்கப் பட்டிருக்கவில்லை. படங்கள் வைக்கப்பட்டிருந்த இடம் மிகவும் குறுகலானதாகவும், போதிய ஒளிவசதி இன்றியும்

www.tamilarangam.net

இருந்தது. படங்கள் பற்றிய விளக்கமளிக்க ஒரு குழுவையேனும் அமைப்பாளர்கள் ஏற்படுத்தியிருக்கவில்லை. இதனால் பல நோர்வேஜியர்கள் சரியான விளக்கத்தைப் பெறமுடியாமல் இருந்தது.

(இன்னும் வரும்)



## படம் சொல்லும் கதை


- சிவன் -

வெளிநாட்டவருக்குகெதிரான தீவிர கொள்கை உடைய தந்தையர்நாட்டுக் கட்சியின் (Fedrelandspartiet) தலைவரும் பேராசிரியருமான ஹரால்ட் த்றெ:பால் (67) பொதுத் தேர்தலையொட்டித் தனது சொந்த இடமான பேர்கனில் கூட்டம் ஒன்று நடத்த முயன்றபோது, அங்கு கூடியிருந்த இளைஞர்கள் 'நாஸிப்பன்றியே (nazisvin) பேசாதே' என்று கூக்குரலெழுப்பி, அவர்மீது முட்டை தக்காளிப்பழம் போன்றவற்றை வீசி அவரைப் பேசவிடாது தடுத்தனர். இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட ஐந்து இளைஞர்களைப் பொலிசார் கைது செய்து அபராதம் விதித்தனர். இக்கட்சிக்கு நாடுதழுவிய ரீதியில் பத்தாயிரம் வாக்குகள் கிடைத்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# BRYLLUPSREISE







Tegning: TOM, TROUW, AMSTERDAM

www.tamilarangam.net

# கண்டுரசித்த கேலிச்சித்திரங்கள்

கண்டுரசித்த கேலிச்சித்திரங்கள்

● கேசவன்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



www.tamilarangam.net



# ஒரு கடிதம்



அன்பு நண்ப,

நீ அனுப்பிய சகல கடிதங்களும் கிடைத்தன. எனது கடிதங்கள் உனக்குக் கிடைத்திருக்க நியாயமில்லை. ஏனெனில் நான் ஒரு கடிதமும் உனக்கு இதற்குமுன் எழுதவில்லை. நான் கடிதம் போட முடியாத அளவுக்கு நீ மறக்கப்படக்கூடிய நபரில்லை. மறக்கமுடியாத நினைவுகளின் அழுத்தம் அதிகரித்தமைதான் எழுத முடியாமல் போனது. எதை எழுத? இங்கு நான் நலம் - பறவாயில்லை. வாத்தித் தொழில் உள்ளபடியால், ஒருமாதிரிச் சமாளிக்கிறேன் - பொருளாதார ரீதியிலும், உளவியல் எப்படியடா உன்னை மறக்கமுடியும்? பல்கலைக்கழகத்தின் ஆரம்பத்தில் இருந்து எதிர் நிலைகளில் இருந்த போதிலும், புரிந்துகொண்ட மனிதாயமிக்க அந்த உறவுகளை, நினைவுகளை, பிற்காலத்தில் நெருக்கமாக எம்மைப் பிணைத்த அந்த வாழ்க்கையை எப்படியடா மறக்க? இதையெல்லாம் நான் எப்ப மறக்கின்றேனோ (?) அப்பதான்டா உன்னையும் மறக்கமுடியும். இங்கு எதுவும் மறக்கப்படவில்லை. எவரும் மறக்கப்படவில்லை. மாயமான் வாழ்க்கை என்ன மாயமாக மறைந்து போய்விடும் அதிகரித்து வருகின்றன. சிறிது காலத்தில் ஒருவரை ஒருவர் நம்பாமல் பைத்தியம் பிடித்த மனிதர்களாக ஆகிவிடுவார்கள் போலுள்ளது.

தெற்கில் ஜேவிபியின் நிலை மிக மோசமாகவுள்ளது. அதன்மீது எனக்கிருந்த சிறு நம்பிக்கையும் தகர்வதைப் போலுள்ளது. இலங்கையின் எதிர்காலம், சந்தர்ப்பவாத அரசியல் சகதிக்குள் மூழ்கிக் கொண்டிருக்கிறது. இந்த இருண்ட நிலைக்கு வெளிச்சம் தரக்கூடிய சக்திகள் எது என்பது கேள்விக்குறியாக உள்ளது. தென்னிலங்கையிலுள்ள முற்போக்கு

www.tamilarangam.net

**"எந்த ஏகாதிபத்தியத்திடமும், ஜனநாயக விரோத சக்திகளிடமும் சரணடையாமல், மக்களைப் பணயம் வைத்துப் போராடாமல், போராட்டம் பரிணாம வளர்ச்சி அடையும் என்ற நம்பிக்கை நிறையவே உண்டு."**

ரீதியிலும். எதுவுமே நம்பிக்கையளிக்கும் வகையில் இல்லை. கடந்தகால வாழ்வின் நம்பிக்கையான, அர்த்தபுஷ்டி நிறைந்த அந்த வாழ்வின் எந்த அம்சமும், எந்தக் கணமும் இலகுவில் மறந்துபோகக் கூடியவையாக இல்லை. நல்லூர்த் திருவிழா நடைபெறுகிறது; அந்நியனின் காலடித் தடயங்கள் எல்லையற்று எல்லாவிடங்களிலும் படிந்துள்ளது; நாங்கள் ஒட்டிய சுவரொட்டிகளைப் பார்க்கிறேன். எல்லாவற்றிலும், ரியூட்டரி, சினிமாப்படப் போஸ்டர்களே நிறைந்துள்ளன. நாங்கள் புரண்டெழும்பிய நல்லூர் வீதிகளின் மணல்வெளிகள் வெறுமையாகச் சிரிப்பதைப் போன்று....... நான் திரிந்த கிராமத்துக் குடிசை வழிகள், வயல் வெளிகள், ஆற்றுநீர் எல்லாமே திட்டித் தீர்ப்பன போல் உள்ளன. வெளியில் சிரித்துத் திரிய முடிகிறது. ஆனால் உள்ளுக்குள் வெட்கப்படாமல், அழாமல் இருக்க முடியவில்லை. அடே நண்ப, என்றா நினைக்கிறாய். இந்த அவலமான, ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூலையில் தூக்கி வீசப்பட்டு நினைவுகளை மட்டுமே சுமந்த மனிதர்களாக வாழ்வதற்கு, நாடகங்களில் முன்னணிக்கு வராமல், பின்னணிப் பாடகர்களாக இருந்தமைதான் காரணமென யோசிக்கிறேன்.

இங்கு விடுதலை இயக்கங்கள் எல்லாமே தீவிரமான உற்பத்தி(?) நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றன. இதற்கிடையில் நாங்கள் அறுவடை செய்யப் படாமல் தப்பி வாழ்வதென்பது கேள்விக்குறியாகவே உள்ளது. எல்லோரையுமே துரோகிகளாகவும், எதிரிகளாகவும் பார்க்கின்ற போக்கு மோசமடைந்துள்ளது. அடிக்கடி யாழ் தெருக்களில் துப்பாக்கிச் சத்தங்கள், அதைத் தொடர்ந்து விலைமதிப்பற்ற மனித உயிர்கள், மதிப்பற்றுப் போய்விடுகின்றன. கொழும்பு நகரில், சாக்கு மூட்டையில் உடல்கள் கண்டுபிடிக்கப் படுகின்ற தகவல்கள் சக்திகளும் சரி, வடக்கின் முற்போக்குக் குழுக்களும் சரி, தமக்குள் முரண்படுபவர்களாகவும், நிலைமைகளைக் கண்மூடித்தனமான விருப்பங்களில் இருந்து மதிப்பீடு செய்பவர்களாகவும் உள்ளன. இதில் எனது பங்கு எப்படி இருக்கமுடியும்? மிகவும் கடினமாகவுள்ளது. என்னைப் பொறுத்தவரை இன்று இந்திய எதிர்ப்பு கண்மூடித்தனமானதாக இருக்கமுடியாது. மக்களின் ஜனநாயக உரிமைக்காக, இறைமையைப் பாதுகாக்க இந்தியாவை எதிர்த்துப் போராடுவது அவசியமானது. ஆனால் கேள்வி, இதன்பின் பொறுப்பேற்கும் (இடைக்கால நிர்வாகம்) LTTEயிடம் ஜனநாயக உரிமை என்பது உள்ளதா? ஒரு வரையறுத்தளவில் இயக்க ஐக்கிய முன்னணியூடாக இந்திய எதிர்ப்புப் போராட்டம் என்பதும் ஓரளவு சாத்தியம். முற்போக்கு ஜனநாயக சக்திகளிடம் ஐக்கிய முன்னணிக்குப் போகுமளவுக்கு என்ன பலமுள்ளது. ஒரு தசாபதத்தை

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடைந்துவிட்ட தமிழீழப் போராட்டம பல படிப்பினைகளைத் தந்துள்ளது. இதிலிருந்து அடுத்த கட்டத்திற்கு எவ்வாறு போராட்டம் மாற்றம் அடையவேண்டும் என்பது தற்போது விவாதத்திற்குரிய விடயமாக உள்ளது. புத்திஜீவிகளாகக் காட்டிக்கொள்ளும் பலருக்கு இதைப்பற்றி அக்கறையில்லைப் போலுள்ளது. எங்கே சுற்றியும் திரும்பவும் அதேயிடத்திற்குச் செல்லும் நிலைதான் அவர்களுடையது.

எந்த ஏகாதித்தியத்திடமும், ஜனநாயக விரோத சக்திகளிடமும் சரணடையாமல், மக்களைப் பணயம் வைத்துப் போராடாமல், போராட்டம் பரிணாம வளர்ச்சி அடையும் என்ற நம்பிக்கை நிறையவே உண்டு.

அன்புடன்,
தில்லை,
நவம்பர் 1988, இலங்கை.





புழுதிகளும் தெருக்களும்
கருகிப்போன வயல்களும்
எங்கள் இருப்புக்கு
இயற்கையின் வரவு கூறும்

இவற்றை எதிர்த்து
வெட்டிய பனைகள்
மீண்டும் துளிர்க்கத் தொடங்கும்

## தில்லையின் ஒரு கவிதை

எதையும்
எதிர்த்து நிற்கும்
எதிர்காலத் தலைமுறைக்கு
இவை
வரவு கூறும்

www.tamilarangam.net

# பாட்டனாரின் பேரர்கள்

## சிவசேகரம்

பாட்டனாரின் வீட்டுக்குட்
படியேறி எல்லாரும்
அடிவைக்க முடியாதாம்.
வைக்கிறபேர் அனைவருமே
அமருமென்று சொல்லாமல்
உட்கார முடியாதாம்.
அமர்வதற்குத் தகுதியிலார்
கைகட்டித் தம்தோளிற்
துணிகழற்றி நிற்பாராம்

பாட்டனார் வளவுக்குட்
கண்டநின்ற பேரெல்லாம்
கால் பதிக்க முடியாதாம்.
வரத்தகுந்த பேரெல்லாம்
முன்படலை வழியாக
உள் நுழைய முடியாதாம்.
பின்படலை வழிவருவோர்
குரல்கொடுத்து உத்தரவு
பெற்றாற்தான் வரலாமாம்.

பாட்டனார் வாழுகின்ற
தெருவழியே சத்தமாய்ச்
சிரிப்பதற்கும் முடியாதாம்.
சாவீடு என்றாலும்
பாட்டனார் காதுபடப்
பறையொலிக்க முடியாதாம்.
வீதிவழி பாட்டனார்
வருகையிலே எல்லாரும்
வழிவிலகி நிற்பாராம்.

பாட்டனார் செத்துப்போய்
பலகாலம் இப்போது.
ஊர்ச்சனங்களெல்லாம்
போய்வருவார் தெருவழியே.
வாகனங்கள் விரைந்தோடும்,
வாலிபங்கள் விசிலடிக்கும்.
வாசல்வரை வருவோரை
வழிமறிக்க இயலாது.
வீட்டுக்குள் நுழைவோரின்
சாதிகுலந் தெரியாது.
பணிந்திருந்த சாதியினர்
பயமின்றித் திரிகின்றார்.
போட்டிருந்த சட்டங்கள்
காற்றோடு போயாச்சு.
ஆண்டிருந்த பரம்பரையின்
அதிகாரங் குறைவாச்சு.
பாட்டனார் குலப்பெருமை
பழங்கதையாய்ப் போயாச்சு.

****

பேரர்களின் சந்திப்பிற்
பாட்டன்மார் காலத்துப்
பழங்கதைகள் பேசிடுவார்.
போயொழிந்த காலத்தின்
மேன்மைகளைக் கீர்த்திகளை
மீட்டுமிக மனம் நெகிழ்வார்.
சுற்றிவரும் வரலாற்றின்
பொற்காலம் மீளுமென
தேற்றித் தம்வழி பிரிவார்.

****

அயல் மண்ணில் அனைவருமே
அகதிகளாய் வாழ்ந்தாலும்
கரியவராய் அந்நியராய்க்
கழித்தொதுக்கப் பட்டாலும்
பாட்டனார் இருக்கின்றார்
பழங்கள்ளின் போதைதர.

www.tamilarangam.net

**நாற சநதி**

## கருத்தின் மீது சுதந்திரமும், குதர்க்கத்தின் மீது தர்க்கமும்

இலக்கியச் சந்திப்பின் 14வது அமர்வு பாரிஸில் நிகழ்ந்தது எல்லோருக்கும் நினைவிருக்கக் கூடும் இவ்வமர்வில் கருத்துச் சுதந்திரம் மறுக்கப் பட்டதாக 'சமர்' வெளியிட்ட செய்தியும் நினைவுக்கு வரும். இது பற்றி ஐரோப்பியப் பத்திரிகைகள் மூச்சு விட்டதாகத் தெரியவில்லை, நாட்டிலே மறுக்கப்பட்ட கருத்துச் சுதந்திரத்திற்காகக் குரல்கொடுக்கும் பத்திரிகைகள் இவ்விடயத்தில் நீள்மௌனம் கொள்வதன் நோக்மென்ன? கருத்துச் சுதந்திரம் நாட்டில் மறுக்கப் பட்டாலென்ன இலக்கியச் சந்திப்பில் மறுக்கப் பட்டாலென்ன, கண்டிக்கப்பட வேண்டியவைதானே.இதில் பாரபட்சம் இருக்க முடியாது. ஏன் இந்தநிலை?

ஒருவேளை மாக்சிசத்தைத் தூக்கிப் பிடித்தவர்களின் கருத்துத்தானே மறுக்கப்பட்டதென இவர்கள் அலட்டிக் கொள்ளவில்லையோ என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. கருத்துச் சுதந்திர மறுப்பு எத்திசையில் இருந்து கிளம்பினாலும் அதற்கெதிராகக் குரல் கொடுக்கவேண்டும். இல்லையென்றால் நம்பகமான வாசக படைப்பாளிகளையோ, புதிய மனிதர்களையோ பத்திரிகைகள் உருவாக்கிவிட முடியாது. அனைத்துக் கருத்துகள் மீதான சுதந்திரத்தையும், விமர்சனத்தையும் முன்நிறுத்தாத பத்திரிகைகள் சமூகத்தில் நீடித்துழைக்க முடியாது. இது பத்திரிகைகளுக்குத் தெரியாதிருக்க நியாயமில்லை.

இந்த இலக்கியச் சந்திப்பை ஈர்த்த இன்னொரு விடயம், மாக்சிசம் இறந்துவிட்டது என்பதுதான். பாருங்கள், இக்குரல் ஒலித்ததும் அரங்கு நிறைந்து கரகோசம் எழுந்ததாம். இவர்களுக்கும் இவர்கள் போன்றோருக்கும் இது பொன்னான காலம்தான். புரட்சிக்குப் பிந்திய (பு.பி) ரஷ்ய, சீன, கிழக்கு ஐரோப்பிய மாற்றங்கள் இவர்களின் வாய்ப்பந்தலுக்குச் சரியான சந்தர்ப்பங்கள்தான். எவ்வளவுதான் கூப்பாடு போட்டாலும் மாக்சிசம் இறந்துவிட்டதற்கான எந்தவித தர்க்க நியாயங்களையும் இவர்களால் முன்வைக்க முடிவதில்லை; ஒருவரேனும் இதுவரை முன்வைத்ததுமில்லை. நெடுக்கி, முழங்கி நீண்ட

'சுவடுகள்' ஐரோப்பிய நாடுகளில் இருந்து வெளிவரும் தமிழ்ச் சஞ்சிகைகளில் அற்புதமான சஞ்சிகை. படைப்புகள் சிந்தனைகள் அனைத்தும் புதிய பரிமாணங்கள்.

ரி.எல்.ஜவ்பர்கான்,
காத்தான்குடி,
இலங்கை.

விவாதம் செய்ய நான் வரவில்லை. இவர்கள் சொல்வதையே இவர்கள் அறியாதிருக்கும் வேடிக்கையைக் குழந்தைத் தனமாகச் சொல்ல வருகிறேன்.

நிலப்பிரபுத்துவத்தையும் - முதலாளித்துவத்தையும் பிரித்துக் காட்டியது மாக்சிசம்தான். முதலாளித்துவ சமூக அமைப்பையும் அதன் தன்மை, உட்கூறுகள், அதன் இயக்கப் போக்கு போன்றவற்றைச் சரிவர ஊகித்தறிந்ததும் - ஆய்வு செய்ததும் இதே மாக்சிசம்தான். சரி, மாக்சிசம்தான் இறந்துவிட்டதென்றால் அதுபற்றி இனி என்ன பேச்சு. அதன் அடிப்படைகளை யாரும் தொட்டுக்கூடப் பார்க்கக்கூடாது. பயனில்லை. இருக்கட்டுமே.

மாக்சிசம் இறந்துவிட்டது - பு.பி. சமூகங்களான ரஷ்யா, சீனாவில் முதலாளித்துவம் மீட்டெடுக்கப் பட்டது. இதுதானே உங்கள் ஆதாரம். ரஷ்யாவிலும் சீனாவிலும் முதலாளித்துவம் மீட்டெடுக்கப் பட்டது. உழைப்பும்; உழைப்பின்மீது சுரண்டலும் அங்கே இருக்கிறது. இதையெல்லாம் யார் உங்களுக்குச் சொன்னது? அது முதலாளித்துவ சமூகம்தானென்று எந்த அடிப்படையை வைத்து முடிவுக்கு வந்தீர்கள்? ஏன் தயக்கம். வெட்கத்தைவிட்டுச் சொல்லுங்கள், மாக்சிசம்தானே.

இப்பொழுது புரிகிறதா உங்கள் அறியாமை? மாக்சிசம் இறந்துவிட்டது என்ற உங்கள் கூற்றைக்கூட நியாயப் படுத்துவதற்கு மாக்சிசத்தின் அடிப்படைகள் தேவைப்படுகிறதே! பிறகெப்படி அது இறந்திருக்க முடியும்? இதுதான் முதலாளித்துவமெனச் சுட்டிக்காட்டிய மாக்சிசம்; முதலாளித்துவத்தை இறுதிவெற்றி கொள்ளும்வரை வாழும். இதை நிராகரிக்கும் தர்க்கபலமோ, கோட்பாட்டு நியாயங்களோ இன்றுவரை அறிவியலுக்கில்லை.

(பிற்குறிப்பு: ரஷ்யா, சீனாவினது இன்றைய தோல்விகள் மாக்சிசத்திற்குப் பெரும் சவால்களே. கடந்த ஒன்றரை நூற்றாண்டுகால அனுபவங்களில் இருந்து இதை மீட்டெடுக்காதவரை; காலத்தை வெற்றிகொள்ளாதவரை, இவர்களின் வாயைப் பொத்தவோ, மாக்சிசம் யதார்த்தத்திலே கடைப்பிடிக்க முடியாத கனவுதானா என்ற பாமர நியாயங்களுக்கு மௌனம் கலைத்துப் பதில் சொல்லிவிடவோ முடியாது)

**குமரேசன்**

இதழ் 48இல் சியாமளா எழுதும் அடுப்படியிலிருந்து ஆயுதப் போராட்டம்வரை... என்ற கட்டுரையில் இந்தியாவில் என்எல்எஃப்ரியினரின் ஒரு நடவடிக்கையை எழுதியிருந்தார். தனது மகனைத் தேடி இந்தியா சென்ற தாய்க்கு இழிவுபடுத்தும் ஒரு மட்டமான




சுவடுகள் வளர்ச்சி மிக நன்றாய் இருக்கிறது. சஞ்சிகை வெளியிடுவது என்பது வெள்ளைப் பேப்பரில் கறுத்த மையைத் தெளிப்பதல்ல என்பதைச் சுவடுகள் புரிந்து கொண்டுள்ளதையிட்டு மகிழ்ச்சி. அட்டைப் படங்களும் நேர்த்தியாய் அர்த்தத்துடன் அமைந்துள்ளன.

தீபன்,
தமிழீழம்.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சொல்லால் வைது துரத்தினர் என்ற தகவல் எவ்வளவு உண்மை என்பதே எனது கேள்வி. நான் என்எல்எ.:.ப்ரியில் இருந்தவன். என்எல்எ.:.ப்ரியில் நடக்கமுடியாது என அடித்து வாதிட்டுவிட முடியாத வகையில் பல சம்பவங்கள் உண்டு. ஆனால் குறித்த இச்சம்பவம் நடைபெற வாய்ப்பு இல்லை என்று கருத இடமுண்டு.

ஏனெனில் பயிற்சிக்கு எனக் கொண்டுசென்ற மிகச்சிறிய எண்ணிக்கையினர் முன்பே அவர்களது குடும்பத்திற்கு நன்கு தெரிந்தவர்கள்; மற்றும் என்எல்எ.:.ப்ரியின் உறுப்பனர்களைத் தெரிந்தவர் என்றே இருந்தனர். இந்தியப் பயிற்சி முகாம் வெளியார் கண்டுபிடிக்க முடியாத வகையிலும் இருந்தது. இப்படி ஒரு சம்பவம் நடைபெற்றிருந்தால் பின்னர் கடும் விவாதத்திற்கு வந்திருக்கும். எனவே இது உண்மையான தகவலா? அப்படியாயின் எத்தனையாம் ஆண்டு யாருக்கு நடந்தது? இப்படிச் சொன்ன முக்கிய உறுப்பினர் யார்? முக்கிய உறுப்பினர் யார் என்பது 87இல்கூட எல்ரிரீக்கே தெரியாதிருந்தது. எனவே விவரமாக முன்வைக்க வேண்டும்.

அடுத்து, பெண்களை இழிவுபடுத்தும் சொல் என்பது எது? அதை யாருக்கும் பாவிக்கமுடியாதா? ஒரு பெண், ஆண் மீதான பிரச்சனை மீதான எந்தவகையான நடவடிக்கையும் சமமானது. அதுவே பெண் கோரும் சம உரிமையாகவும் இருக்கும். பெண் என்பதால் என விசேடமான நடவடிக்கை கோருவது பெண்ணடிமைத்தனக் கருத்தியலில் இருந்து எழுவதே.

என்எல்எ.:.ப்ரி பெண்விடுதலை தொடர்பாக எல்லோரையும்விட முன்னேறிய கருத்தைக் கொண்டிருந்தது. ஆனால் அதில் இருந்த மத்திய குழு உறுப்பினர்கள் சிலர் பெண்கள் தொடர்பாக மட்டரகமான சிந்தனையும் கருத்தும் கொண்டிருந்தனர். அமைப்பில் மூன்று பெண்கள் முன்னணியில் இணைந்திருந்த போது, அதில் இருவர் துணையை அமைப்பில் தேடியிருந்தபோது அதை மத்தியகுழு உறுப்பினர் ஒருவர், அவர்களை மாப்பிள்ளை பிடிக்க வந்ததாகக் கூறிக் கருத்தாக எடுத்துச் சொன்னார். இதை நான் உட்பட எதிர்க்காது இருந்தது (இது உடன்பாட்டின் அடிப்படையில் அல்ல) அன்று அதற்குத் துணைபோனதே. அதேநபர் மூன்றாவது பெண்ணைப் பின் திருமணம் செய்துகொண்டார். இப்படிப் பெண்கள் பற்றிப் பல. ஆனால் இவை எப்போதும் அமைப்புக்குள் முரண்பட்டே இருந்தது. மற்றும் என்எல்எ.:.ப்ரி மற்றைய இயக்கங்கள் போன்று பிழையான நடவடிக்கையில் ஈடுபட




www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாய்ப்புகள் பல கொண்டிருந்தது. என்எல்எ.்.ப்ரி ஒரு கொலை செய்தது. விசுவமடுவில் சி.ஐ.டி என ஒருவரைக் கைது செய்ததும் பின் இரு மத்தியகுழு உறுப்பினர் உட்படச் சில பிரதேச உறுப்பினர் முடிவெடுத்துக் கொன்றனர். இது தொடர்பாகப் பத்துமாதமாக மத்தியகுழுவுக்கு மறைக்கப்பட்டது. என்எல்எ.்.ப்ரி, பிஎல்எ.்.ப்ரி உடைவின்போது பிஎல்எ.்.ப்ரியில் கொலைதெரிந்த ஒருவர் பிஎல்எ.்.ப்ரியில் இணைந்தபோது தவிர்க்கமுடியாது அறிவித்தனர். இதில் இந்நபரின் அடையாள அட்டை கொக்குவில் என இருந்தும் அதைப்பற்றி விசாரணை செய்து தகவல்தரக் கோரியும் அதுபற்றியும் எதுவும் சமர்ப்பிக்கவில்லை.

இதே இரு மத்தியகுழு உறுப்பினர்களும், பிஎல்எ.்.ப்ரி உடையமுன் கருத்து முரண்பாடு முற்றி இரண்டாக வேலைசெய்த காலத்தில் பிஎல்எ.்.ப்ரியைச் சேர்ந்த இருவரைத் தற்காப்பிற்காகச் சுட்டுக் கொல்லவேண்டும் என முன்கூட்டியே திட்டம் தீட்டி மத்தியகுழுவில் வேறு இரு அங்கத்தவர்களுக்கு அறிவித்தனர். அவர்கள் இருவரின் எதிர்ப்பினால் அது கைவிடப் பட்டது. இல்லாதபோது அவர்கள் கொல்லப் பட்டிருப்பர்.

இப்படி, அமைப்பு பலவகையில் குட்டிபூர்ஷ்வாத் தன்மையுடன் கூடிய மாற்று இயக்கத்தின் பல தவறான அம்சங்களைக் கொண்டிருந்தது. இத்தனைக்குள்ளும் அமைப்புக்குள் மக்கள் சார்பான போக்கே அப்போது மேலோங்கியிருந்தது. அதுவே தவறானதாகப் போகாதவகையில் என்எல்எ.்.ரியைக் காப்பாற்றியது.

**சிறி,**
**பிரான்ஸ்.**

பெப்ரவரி சுவடுகள் இதழில் தாய்மொழிப் புத்ததுறவி தம்மதேரோ பற்றிய விவரமும், தமிழ் என்ற சொல்லுக்கு தாய்மொழியில் உள்ள விளக்கமும், அதைத் தொடர்ந்து ஏப்ரல் சுவடுகளில் கி.பி.அரவிந்தனின் 'தமிழ் (தமிழர்) = பயங்கரவாதம் + பிசாசு' என்ற கட்டுரையில் தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் 'ஒன்றே உலகம்' என்ற நூலில் வந்த ஒரு கட்டுரையை நினைவுகூர்ந்து சில தகவல்களைக் கூறி அந்த நூலில்தானா என்ற தயக்கத்தையும் வெளியிட்டார். அவரின் தயக்கத்தை நீக்கும் முகமாகவும், வாசகர்களுக்குத் தெ. வினை

## தேடல்

*நீண்ட காலத்திற்குப் பின்னர் மறுபடியும் கனடாவில் இருந்து வெளிவருகிறது தேடல். தொடர்புகள்:*
Thedal,/ 566 Parliament St,/ Toronto, Ont/ Canada M4X 1P8

## பூவிழி

*இலங்கையின் நெருக்கடியான நிலைக்குள்ளும் நல்ல இலக்கிய முயற்சிகள் நிகழ்கின்றன. கல்முனையில் இருந்து வெளிவரும் இலக்கிய இதழ் பூவிழி தரமான படைப்புகளையும் ஆதரவையும் எதிர்பார்க்கிறது.*
முகவரி: பூவிழி, 332 அலியார் வீதி, கல்முனை - 06, இலங்கை.

www.tamilarangam.net

ஏற்படுத்தும் முகமாகவும் கீழ்வருவனவற்றைத் தருகிறேன்.

கி.பி.அரவிந்தன் கூறிய நூல் தவத்திரு தனிநாயகம் அடிகளால் எழுதப்பட்ட 'ஒன்றே உலகம்', இதனை வெளியிட்டவர்கள் 'தேநோபில் ஆராய்ச்சி நிலையம்', லோயோலோ கல்லூரி, சென்னை – 34.

அடிகளார் தான் பயணம் செய்த நாடுகள், அவற்றின் பண்பாடுகள், அவற்றுக்கும் தமிழ்மொழி; கலாசாரங்களுக்கும் உள்ள தொடர்புகள் பற்றி எழுதியுள்ளார். 21 கட்டுரைகளைக் கொண்டது இந்நூல்.

அரவிந்தன் நினைவுமீட்டியதுபோல் பர்மாவில் 'தமிழ் என்றால் பிசாசு' என்றது, பர்மா பற்றிய கட்டுரையில் குறிப்பிடப் படவில்லை. ஆனால் 17வது கட்டுரையாக அமைந்திருக்கும் 'தாய்லாந்து' என்ற கட்டுரையில்தான் அரவிந்தன் குறிப்பிட்டது போல் தகவல் உள்ளது. கட்டுரையில் மேற்கண்ட செய்திகள் வரும் இடங்களை அப்படியே தருகிறேன்.

* *கோயில் ஒன்றில் அவர்களது அரசகுருவைக் கண்டு, தாய் மன்னரின் முடிசூட்டு விழாவில் பாடும் தமிழ்ப் பாக்கள் யாவை என்று வினவியபோது, அரசகுரு அவர்கள் தாய்மொழியிலும் கிரந்தத்திலும் சில ஏடுகளை எடுத்துப் படித்தார். அவர்களுடைய ஒலித்தல் முறை வேறுபட்டிருந்தாலும், பண்டுதொட்டு வாழையடி வாழையாகப் பாடிவரும் பாணியில் அவர் பாடலை இசைத்தார். அவை மணிவாசகப் பெருமானின்*

*ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ்*
*சோதியையாம் பாடக் கேட்டேயும்*

*எனத் தொடங்கும் திருவெம்பாவையின் முதல் இரு பாக்கள் என உணர்ந்தேன். (பக்.200)*

* *இப்பக்திப் பாடற்றொடர்பினைத் தவிர வேறு இலக்கியத் தொடர்பும் தமிழ்நாட்டிற்கும் தாய்லாந்திற்கும் உண்டு. மணிமேகலை தெய்வ வழிபாடு தாய் நாட்டிலும் பரவியிருந்தது. டீயா அனுமான் என்னும் சிறந்த தாய் மொழி அறிஞர் என்னுடன் உரையாடும்போது தாய் மொழியில் இடம்பெற்றுள்ள இராமாயணத்தின் பெரும்பகுதி தமிழ்க் கம்பராமாயணத்தைத் தழுவி யாக்கப்பட்டது என்றார். (பக்.201)*

* *தாய்லாந்தில் தமிழ் என்ற சொல்லுக்குத் தாய் மக்கள் புதுப்பொருள் கொடுத்திருக்கின்றனர். தமிழ் என்னும் சொல்லை அவர்கள் 'தமின்' என 'ன்'கர ஒலி கொடுத்து ஒலிக்கின்றனர். 'தமின்' எனப்படுவது அவர்கள் மொழியில் கொடியவன்*

சுவடுகள் ஊடாக சியாமளாவுக்கு,

சுவடுகள் இதழ் 49இல் அடுப்பங்கரையிலிருந்து ஆயுதப் போராட்டம்வரை என்ற சியாமளாவின் கட்டுரையில் (ப.58) இயக்கத்திற்குச் சொல்லிக்கொள்ளாது ஓடிப்போன தனது மகனைத் தேடி அவரது தாய் இந்தியாவிலுள்ள என்எல்எ∴ப்ரியினரின் முகாம்வரை சென்று தேடியபோது பல நாட்கள் அலைக்கழித்துப் பின்னர் இல்லையென்று, ஆத்திரமுற்ற அத்தாய்மீது முக்கிய உறுப்பினர் ஒருவர் மட்டமான சொல் ஒன்றினால் வைது துரத்தியதாகக் குற்றம் சாட்டியுள்ளீர்கள்.

என்எல்எ∴ப்ரியின் உடைவுவரை (85இறுதிவரை) இவ்வமைப்பில் இருந்தவன் என்றமுறையிலும் இதற்கு முன்னரோ பின்னரோ இவ்வாறான ஒரு விடயம் நிகழ்ந்ததாக அறியமுடிந்ததில்லை.

தயவுசெய்து எந்த ஆண்டில், எந்த முகாமில் இது நடந்ததென அறியத் தருவீர்களா?

என்ற பொருளைப் பெற்றிருக்கிறது. பேங்கொக்கை விட்டுச் செல்லும் மின்வானூர்தி நிலையத்தில் உள்ள ஊழியரிடம் 'தமின்' என்ற சொல்லுக்குப் பொருள் கேட்டேன். அவர் "தமின் என்றால் ஒரு கொடிய கறுத்த இந்தியன்" என்றார். சோழர் ஈழநாட்டின்மீது படையெடுத்த காலத்தில் புத்தமுனிவர்கள் பலர் ஈழத்தில் இருந்து தாய்லாந்திற்குக் கப்பலேறிச் சென்றனர். அவர்கள் அங்கு சென்றிருந்தபோது, தமிழ்மக்கள் தங்கள்பால் இழைத்த கொடுமைகளைப் பற்றிப் பேசினர். இதுகாரணம் பற்றியே தாய்லாந்தில் அதுகாறும் சிறப்புப் பெற்று விளங்கிய 'தமிழ்' என்ற சொல்லுக்குக் கொடுமையுடன் தொடர்புடைய பொருளொன்று வந்து சேர்ந்தது.

**தீபன்,**
**தமிழீழம்**

துணைவேந்தரது உரை அவ்வளவு திருப்தி தருவதாக இல்லை. ஏதோ சமநிலைக்காரன் என்று சொல்லிவிட்டு மனுசன் புலிகளுக்குப் பயந்து சாகிறார். என்ன செய்யலாம். அவருக்கும் வாழவேண்டும் என்ற ஆசைதான். மனிதஉரிமை நிறுவனங்களைச் சாடுகிறார். அவரும் அப்படியான தவறைத்தானே செய்திருக்கிறார். துணைவேந்தரது உரையின் முக்கிய நோக்கம் - தன்மை வேறு. நீங்கள் அப்படியானதொரு iceவைக்கிற தலைப்புப் போட்டிருக்கத் தேவையில்லை.

சுவடுகள் கொண்டுள் பக்கங்களின் பிரகாசம், எழுத்துகளின் அழகு எந்தவொரு புகலிடச் சஞ்சிகைக்கும் இல்லாதது. அது கொண்டுள்ள வித்தியாசமான எழுத்துகளும் - தனித்துவப் போக்கும் என்னை மிகவும் கவர்ந்துள்ளன.


சோலைக்கிளியின் சமீபத்துக் கவிதைகள் உப்புச் சப்பில்லாமல் இருக்கின்றன. அப்படியான கவிதைகளை என்ன விளங்கித்தான் பிரசுரிக்கிறீர்களோ நான் அறியேன்.

ஆறாவது ஆண்டில் சுவடுகள் பாதம் பதிக்கப் போவதை எண்ணி மனசு மகிழ்கிறது. இன்னும் தொடர வாழ்த்துகள்.

**எம்எல்எம்.அன்ஸார்,**
**காத்தான்குடி.**

வசைசொல் சாடிய அந்த முக்கிய உறுப்பினரதும் மகனதும் புனைபெயர்களை அறியத் தருவீர்களாயின் இன்னும் விசேடமாகவே இருக்கும். சியாமளா, அறியத் தருவீர்களென நம்பலாமா?

**ரூபன்,**
**15.09.93**



www.tamilarangam.net

கடல் அழுத

# தலைவெட்டிய பிணம்

சோலைக்கிளி

கடல், குமுறிக் குமுறி அழுதது.
தன்னில் மிதந்த தலைவெட்டிய பிணத்தை
நினைத்து நினைத்து.

அதைச் செய்தவன் யார்,
என்று மிக ஆத்திரமாய்
ஒரு மீன் துள்ளி
எழுந்தபடி கேட்டது.

வெட்கம், மிக வெட்கம், ஆனால்;
எனக்குத் தெரியாது.
என் அடியில் பிணம் ஒதுங்கிய பிறகு

www.tamilarangam.net

கரையில்
நிற்க மனமில்லை எனக்கு.
என்றபடி
நான் எப்போதும் சாய்ந்திருக்கும் நெடிய முடத்தென்னை
கடலுக்குள் ஒடியது ஓலைகள் உதிர.

எனக்கு "மனம்" உண்டு என்றது கடல்,
சீறிச் சிறிது ஆத்திரமாய்
என்னைப் பார்த்து.
மீன் வளர்ப்பதற்கும்
அலை சினைவைத்துப் பொரிப்பதற்கும்
மட்டும் நானில்லை.
என் கரையில் இருக்கின்ற காதலனின், காதலியின்,
கதைகளிலும் பங்குண்டு;
எனக்கு என்றபடி
சுறாமீன்களே இனிக் காவலுக்குப் போங்கள் இரவுகளில் என் கரையில்
என்று கத்தியது.

இனி யாராலும் முடியாது இரவுகளில், கடலில்
தலை வெட்டிய பிணம் மிதக்கவிட.
அது விடாது!

21.09.93



www.tamilarangam.net


## விளம்பரத்தில் பாலியல்!

விளம்பரங்களில் பாலியலைப் பாவிப்பது ஒன்றும் புதிய விடயமல்ல. அரிசி பாண் விளம்பரத்துக்குக்கூட நிர்வாணப் பெண்களைப் பாவிக்கும் போக்கு பொதுவாகக் காணப்படுகிற ஒரு அம்சம்தான். நோர்வேயைப் பொறுத்தவரை இவ்வாறான விளம்பரங்கள் (ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில்) மிகக் குறைவு. ஒரு வருடம் முன்பாக வெளிவந்த உள்ளாடை விளம்பரம் ஒன்று பலத்த எதிர்ப்புகளைக் கிளப்பியது. நோர்வேயில் இவ்வாறான விளம்பரங்கள் - முக்கியமாக பெண்களைக் கவர்ச்சிப் பொருட்களாகச் சித்திரிப்பவை - வெளிவருபவை குறைவாக இருப்பதற்குக் காரணம், இங்குள்ள பெண்ணுரிமை அமைப்புகள் பலமாக இருப்பதுதான்.

ஆனால் மீண்டும் இவ்வாறான விளம்பரங்கள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. அதிலும் நேரடியாக இல்லாமல் மறைமுகமாகப் பாவிக்கும் போக்கு அதிகரித்து வருகிறது. விளம்பரத் தயாரிப்பு என்பது தனிக்கலை. விளம்பரக்கலை நோர்வேயில் சிறப்பாக வளர்ந்துள்ளதுடன், நாட்டின் கலாசாரத்துடன் ஒட்டியதாகவும் உள்ளது. அனேக ஐரோப்பிய நாடுகளில் விளம்பரக் கலை மந்தமான நிலையிலேயே உள்ளது. பழைய புளித்துப்போன பாணியையே பாவிக்கின்றனர். புதிய பாணிகளை இன்று பல நாடுகளில் தேடுகின்றனர். இவர்களை நோர்வேஜிய விளம்பரங்கள் பெரிதும் கவர்ந்துள்ளன.

இது பாலியலைத் தெரிந்தும் தெரியாமல் புகுத்தும் படம்....

*- சித்திரகுப்தன் -*



www.tamilarangam.net



# அடுப்படியிலிருந்து ஆயுதப் போராட்டம் வரை...

● சியாமளா

(முன்தொடர்)

மூன்றாவது பாதைக்கான வேலைத்திட்டம் தேச விடுதலையை மையப்படுத்தி வகுக்கப்படுவதால் அதில் பெண்களது நிலைப்பாடு பற்றிய முன்மொழிவு தேவையற்றது. பெண்விடுதலை என்பது வர்க்க விடுதலைக்கான போராட்டம் முன்னெடுக்கப்படும் போது பெண்விடுதலைக்கான போராட்டமும் அத்தோடு இணைக்கப்படும் என்ற கருத்து சிலசில இடங்களில் இருந்து வெளிப்படுகிறது. இந்தப் போக்கின் தொடர்பாகப் பெண்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டியது அவசியம். தேசவிடுதலைப் போராட்டத்தில் பெண்களது நிலைப்பாடு சரியாக வரையறுக்கப் படாது விடப்பட்டமையால் கடந்த காலங்களில் பெண்கள் கசப்பான அனுபவங்களையே பெற நேரிட்டது. இந்த அனுபவங்களைக் கொண்டு எதிர்காலத்தைச் சரியான முறையில் வகுத்துக்கொள்ள வேண்டியது இன்று கட்டாயமான பணியாகும்.

மேலும் இன்று பெண்கள் பிரச்சனை தொடர்பாகப் பெண்கள்தான் பேசவேண்டும் என்ற கருத்து இருசாராரிடத்திலும் நிலவுகிறது. இது முற்றிலும் தவறாகும். பெண்விடுதலை என்பது சமூக மாற்றத்துடன் கூடியது. அதற்கான முன்னெடுப்புகளில் முழுச்சமூகமும் இணைந்துகொள்ள வேண்டும். இவ்வாறான கருத்துகளினால் எந்தவகையிலும் பெண்விடுதலைக்கான சரியான வழிகாட்டலை வழங்கமுடியாது. இது பெண்களது வளர்ச்சிப் போக்கினைப் பாதிக்கவே செய்யும்.

"பெண்விடுதலையைப் பிரதிபலிக்கும் கலை வடிவங்களாயும் எழுத்து வடிவங்களாயும் ஆண்களே அதிக பங்காற்றியுள்ளனர். பெண்களைத் தட்டிக் கொடுப்பவர்களும் இவர்களே" என்று சமர் (இதழ்7இல்) எழுதியிருப்பதை முற்றாக நிராகரிக்க முடியாது. ஆனாலும்

www.tamilarangam.net

பெண்விடுதலைக்காகக் குரல் கொடுக்கும் ஆண்கள் பலரது கருத்துகள் பேசுவதோடும் எழுதுவதோடும் நின்றுவிடுகின்றன. நடைமுறையில் பெண்ணுரிமை பற்றிய பிரச்சனைகள் எழுகிறபோது இவர்கள் மௌனம் சாதிப்பதைக் காணமுடிகிறது. உதாரணமாக சமர் 5,6இல் கருக்கலைப்புச் செய்துகொண்டமையால் சமர் ஆசிரியர் குழுவில் இருந்து ஒருவரை நீக்குவதாக ஒரு செய்தி பிரசுரமாகியிருந்தது. மேலதிகமான விவரங்கள் எதுவுமின்றி வெளியான இந்தச் செய்தி பலர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியதைக் காணமுடிந்தது. ஆனாலும் ஐரோப்பிய சூழலில் இருந்து வெளிவரும் சஞ்சிகைகள் எதுவும் தங்களது கருத்துகளை வெளியிட முன்வரவில்லை. பெண்களின் குரலாக வெளிவரும் 'சக்தி' மட்டுமே அதுபற்றிய தனது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளது. அத்தோடு பத்திரிகைச் சுதந்திரத்திற்கு வேட்டு வைக்கப்பட்டுள்ள நிலையில்கூட, அவற்றிற்கு ஈடுகொடுத்துக் கொழும்பில் இருந்து வெளிவரும் 'சரிநிகர்' பத்திரிகை கருச்சிதைவு பற்றிய அனிச்சாவின் விமர்சனத்தை வெளியிட்டுள்ளது. சக்தியில் வெளியான மனிதம் சஞ்சிகையின் ஒரு குறிப்புப் பற்றி விளக்கமளிக்கும் வகையில் சில விவரங்களை எழுதிய மனிதம், இறுதியாகக் 'கருவைச் சுமப்பதுடன் உடல் உள ரீதியில் அனுபவிப்பதும் பெண்கள்தான் என்பதால் கருக்கலைப்புச் சுதந்திரம் பெண்களின் உரிமை என்பதே எமது நிலைப்பாடு' என்று ஒருவரிமூலம் தனது கருத்தை வெளியிட்டுள்ளது. ஏனைய பத்திரிகைகள் சஞ்சிகைகள் அதுபற்றி மௌனமாக இருப்பது அவர்களது பெண்விடுதலை குறித்த நிலைப்பாட்டினைச் சந்தேகிக்கவே செய்கிறது. சமூகம் விடுதலை அடைவதனூடாக அனைத்து ஒடுக்குமுறைகளில் இருந்தும் விடுபட முடியும் என்ற கருத்தில் நம்பிக்கை கொண்டுள்ள இவர்களுக்கு, பெண்விடுதலைக்காக ஆண் பெண் இருசாராருமே இணைந்து போராட வேண்டும் என்ற கருத்தில் முரண்பாடு இருக்கமுடியாது. ஆகவே இவர்கள் தமது மௌனத்தைக் கலைத்து பெண்ணுரிமை அல்லது பெண்கள் பிரச்சனை குறித்த விடயங்களில் பகிரங்கமாகத் தமது கருத்துகளை முன்வைப்பின் ஆரோக்கியமான கருத்துப் பரிமாறல்களினூடாக சரியான கருத்துகள் உருவாக முடியும்.

இன்று பெண்நிலைவாதிகளை நோக்கிப் பலராலும் முன்வைக்கப்படும் விமர்சனம் (ஐரோப்பியச் சூழலை மட்டும் கணக்கில் கொண்டு) "அனேகமாக பெண்விடுதலை பேசும் எல்லோரும் (பெண்கள்) ஆண் எதிர்ப்புவாதிகளாகவே இருக்கிறார்கள்" என்பது. இன்று இது ஒரு முக்கிய பிரச்சனையாக உள்ளது. இந்த விமர்சனத்தை முற்றாக நிராகரிக்க முடியாதபடி பெண்நிலைவாதிகள் பலரிடம் ஆண் எதிர்ப்பு உணர்வுதான் மிஞ்சியிருப்பதைக் காணமுடிகிறது. ஆணாதிக்கம், ஆண் எதிர்ப்பு என்ற சொற்பிரயோகங்களின் தவறான புரிந்துகொள்ளலே இந்த நிலைமைக்குக் காரணம் எனலாம். ஆண் எதிர்ப்பு என்பது பெண் ஒடுக்குமுறையின் காரணிகளைக் கணக்கிலெடாது நேரடியான காரணியாக ஆண்களைக் கருதுவதாகும். பெண் ஒடுக்குமுறை அடிப்படையில் சமூகத்தின் பொருளாதார ரீதியான மாற்றங்களோடு ஆரம்பிக்கப்பட்டு அரசியல், கலாச்சாரம் போன்றவற்றின் துணைகொண்டு பெண்கள்மீது பிரயோகிக்கப் படுகிறது.

ஆகவே பெண்விடுதலைக்காகக் குரல் கொடுக்கும், உழைக்கும்

www.tamilarangam.net

# நோர்வேயில் பெண்கள் நோர்வேயில் பெண்கள்

* 1991இல் நோர்வேயின் சனத்தொகையான 42,73,634பேரில் 21,60,275பேர் (பாதிக்கு மேல்) பெண்கள்.

* பெண்களின் சராசரி வாழ்வுக்காலம் 79.8வருடங்கள். (ஆண்களுக்கு 73.4)

* 18 வயதுக்கு மேற்பட்டோரில் 7.1% தனியான தாய்மார். 0.8% தனியான தந்தையர்.

* தொழில்புரியும் 20,10,000பேரில் பாதிக்கும் குறைவானோரே (9,15,000பேர்) பெண்கள். வேலை செய்வோரில் முழுநேர வேலை செய்வோரின் வீதம் 52% பெண்கள், 90% ஆண்கள்.

* சம்பளமற்ற வேலையில் ஈடுபடும் (முக்கியமாக வீட்டு வேலைகள்) 1,69,000 பேரில் 1,66,000 பேர் பெண்கள்.

* சராசரியாக வீட்டு வேலைகளில் ஆண்கள் தினசரி 2மணி 36 நிமிடங்களும், பெண்கள் 4மணி 22நிமிடங்களும் செலவு செய்கின்றனர்.

* அலுவலகப் பணி புரிவோரில் 4% பெண்களே தலைமைப் பதவிகளில் உள்ளனர். ஆண்களில் 37%பேர் தலைமைப் பதவிகளில் உள்ளனர். நாடுதழுவிய ரீதியில் உள்ள தலைமைப் பதவிகளில் 23%ஐயே பெண்கள் ஏற்றுள்ளனர்.

* அரசியல் மற்றும் பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ள பெண்களின் வீதம்: மாநகரசபைகளின் ஆட்சியில் - 28.5%, மாவட்ட ஆட்சியில் - 38.6%, பாராளுமன்றத்தில் - 35.7%, (திருமதி புருண்ட்லாந்தின்) அரசில் - 47%.

* சராசரியாக ஒரு பெண்ணுக்கு 1.9குழந்தைகள் என்ற வீதத்திலும், ஒரு குடும்பத்திற்கு 2.14%பேர் என்ற ரீதியிலும் குடும்பங்களின் அளவுகள் உள்ளன.

* திருமணத்திற்கு வெளியே பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை, பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையில் 41%.


பெண்நிலைவாதிகள் பெண் ஒடுக்குமுறையின் அடிப்படையைச் சரியாகப் புரிந்துகொண்டு தமது செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும். ஆண் எதிர்ப்புவாதம், பெண்விடுதலைக்காகக் குரல்கொடுக்கும் ஆண்களைக்கூடப் பின்னடையச் செய்யுமேயன்றி சாதகமான நிலையை உருவாக்காது. பெண்விடுதலைக்கான போராட்டம் ஆண் பெண் இருபகுதியினரும் இணைந்து போராடுவதிலேதான் முழுமையடைய முடியும். இன்று பொதுவாக பெண்விடுதலைக்காகக் குரல் கொடுக்கின்ற பெண்கள் எல்லோரையும் ஆண் எதிர்ப்புவாதிகளாகக் கருதும் போக்கும் ஆண்களிடத்திலும் காணப்படுகிறது. இந்தநிலைமை மாற்றமடைய வேண்டும். சில ஆண்கள் (சமூக விடுதலையை நேசிப்போர் என்று தம்மைக் கூறிக்கொள்வோர்) ஆண் எதிர்ப்புவாதத்தைத் தூண்டிவிடும் வகையில் நடந்துகொள்வதையும் நடைமுறையில் காண்கிறோம். இவர்களது பெண்கள் பற்றிய உள்ளார்ந்த மதிப்பீடு சமூகத்தில் சராசரி மனிதனுக்கு இருப்பது

www.tamilarangam.net

போன்றே இரண்டாந்தரமாக இருப்பதையும் அவதானிக்கலாம்.

இன்னும் சிலர் பெண்விடுதலை பேசுபவர்களை நோக்கி "உங்களுக்கு எந்தவகையான பெண்விடுதலை வேண்டும்?" என்று கேட்பது இன்று வழமையான நிகழ்வாகிவிட்டது. எந்தவகையான பெண்விடுதலை எமக்கு வேண்டும் என்று எதை உதாரணமாகக் காட்டுவது? அவ்வாறு கேட்பவர்கள் தாங்களும் அத்தகைய கேள்விகளுக்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்கள் என்பதை மறந்துவிடுகின்றனர். ஒவ்வொரு நாடும் அல்லது இனமும் தமக்கெனத் தனித்துவமான மொழி, கலாச்சாரம், பண்பாடு, பொருளாதார அடிப்படைகளைக் கொண்டிருப்பதால் குறித்த ஒரு நாட்டையோ அல்லது சமூகத்தையோ நாம் உதாரணமாகக் கொள்ளமுடியாது. அவற்றில் இருந்து சில படிப்பினைகளை மட்டுமே நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆகவே மேற்கூறிய போக்குகள் அனைத்தும் விமர்சனத்துக்கு உட்படுத்தப்பட்டுக் களையப்படல் வேண்டும். இல்லையெனில் நாம் எந்த நோக்கங்களுக்காகப் புறப்பட்டோமோ அவற்றினைச் சென்றடைய முடியாத நிலைமைகளுக்குத் தள்ளப்படுவோம். மேலும், பெண்களுக்கு இவ்வாறான பிரச்சனைகள் இருக்கின்றன என்பதைச் சொல்லிக் கொண்டிருக்கும் நிலைமைகள்தான் எப்போதும் இருந்துகொண்டிருக்கின்றன. "பெண்கள் அடக்கப் படுகிறார்கள், அவர்கள் ஒரு மனிதஜீவனாக மதிக்கப் படுவதில்லை என்பதை அழுத்திச் சொல்லிக்கொண்டிருப்பது பெண்விடுதலையை வென்றெடுப்பதற்கான போராட்டமாக ஆகிவிடாது" என 'ஓசை' சஞ்சிகையில் (தை - பங்குனி) ரதி எழுதியிருப்பது போல எங்களுக்கும் பிரச்சனைகள் இருக்கின்றன என்பதைச் சொல்லிக் கொண்டிருப்பதை விடுத்து அவற்றைத் தீர்ப்பதற்கான வழிகளை முன்னெடுத்துச் செல்வது பற்றிய விடயத்தில் பெண்நிலைவாதிகளின் கவனம் செலுத்தப்பட வேண்டும். பெண்விடுதலை குறித்த தீர்மானமான கருத்துப் பலத்தை உருவாக்கும் வகையில் விவாதங்கள், ஆரோக்கியமான விமர்சனத்தை அடிப்படையாகக் கொண்ட கருத்துப் பரிமாற்றங்கள் அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டும். இதனூடாக ஒரு பொதுவான பெண்கள் அமைப்பினை உருவாக்கும் வழிவகைகளில் எங்களது செயற்பாடுகளை நகர்த்துவதுதான் இன்று எம்முன்னுள்ள முதன்மையான பணியாகும்.●




"என்ன, அரிவரிப் பிள்ளயள் எல்லாம் தினப்பேப்பரை வைச்சு என்ன பாக்கினம்?"

"இப்ப ஐஞ்சாம் வகுப்புப் படிச்சிருந்தாப் போதும் ஆமிக்கு எண்டு வந்திட்டுது..... எப்ப அரிவரி படிச்சிருந்தாப் போதும் எண்ட அறிவிப்பு வரும் எண்ட ஆவலோட பாக்கினம்"

- அசரீரி -

www.tamilarangam.net

# மூளை கழற்றிய மனிதர்



இளவாலை விஜயேந்திரன்.

மூளை கழற்றி
ஒரு கரையில் வைத்துவிட்டு
முகம் கழுவிப் பின்வந்து
மூளை செருகிப் புறப்படுதல்
வழமையெனில்

இந்த உலகம் எவ்வாறிருக்கும்?

நான் கழற்றி வைத்த
மூளை தூக்குதற்காய்
திரிவான் ஒருத்தன் என் பின்னால்.

நானோ
இந்த ஒருத்தன் போலவும்
இன்னொருத்தான் பின்னால்
நாயாய் அலைய நேரிடும்
நல்லதொரு மூளைக்காய்.

சாப்பிடுதல் உறக்கம்
குளித்தல் வேலைபோல
மூளைக்காய் அலைதலுக்கும்
நேரம் ஒதுக்கப்படும்.

முகம் கழுவும் இடமெல்லாம்
மூளைக்காவலுக்கு ஆளிருப்பான்.

காலையிலே மூளைக்
கள்ளர் நடமாட்டம் பார்த்துக்
கிணற்றடிக்குப் போவார்கள்.

அரச அலுவலகப் பகுதிகளில்
மூளைக் காவலுக்காய்
இருக்கும் ஒருத்தன்
முன்னூறோ நானூறோ தள்ள
நல்லதொரு மூளை தருவான்.

அமெரிக்க அதிபர்
முகங்கழுவும் வேளையெல்லாம்
காவலுக்கு
முப்பதுபேர் செல்வர்கள்
கனத்த துவக்கோடு.

முப்பதுபேர் இல்லாவிட்டாலும்
அந்த மூளையைத் தூக்கி
யாரும் மாட்டார்கள் என்பதனை
முப்பத்தொருவரும் அறியார்.

24.06.92

# மனையாள்

* சித்திரகுப்தன் *


மனையாளின் பல்வேறுபட்ட நாளாந்த நடவடிக்கைகளை ஓவியமாக்கினால் எத்தனை வகை ஓவியங்கள் வரும்? இது எண்ணில் அடங்காது. ஆயினும் அதன் ஓவியச் சுவையே சுவைதான். மனையாளானவள் எத்தனை பொறுப்பு மிக்கவர்களாகவும் பொறுமையுடையவளாகவும் இருக்கிறாள்! அவளின் கஷ்டங்களே அளப்பரியது. இதனையெல்லாம் ஒருமுகப்படுத்தி ஓவியமாக்கிப்



மங்கின் 'கதறல்'

மரிஸ்ஸெ இன் மீன் கழுவுதல் ஓவியம்.





வன்கோவின் படுக்கை தட்டிப்போடல்.

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சேகாவின் குழந்தைக்கு உணவூட்டல்.

பார்க்கும்போது தான் பலருக்கு மனையாளின் கஷ்டங்கள் புரிகின்றன. இந்தப் புரியவைக்கும் வைக்கும் முயற்சியில் இறங்கியவர் அவுஸ்ரேலிய நாட்டின் ஓவியர் Sally Swain தான்! இவர் அவுஸ்ரேலிய நாட்டில் பலரின் கைவண்ணத்தில் உருவான ஓவியங்களைக் காட்சிப்படுத்தினார். இதற்கு இவர் எடுத்துக் கொண்ட தலைப்பானது "அந்தப் பெரிய ஆணின் பின்னால் அந்தப் பெரிய பெண் "

என்பது தான். இதற்காக இவர்உலகின் பிரபலமான பல ஓவியர்களின் கைவண்ணங்களைச் சேகரித்துக் காட்சிப் படுத்தினார். இவ் ஓவியங்களோ வெவ்வேறு கோணங்களில் இருப்பினும் அனைத்தும் கலைச் சுவையானவை, கைநேர்த்தியானவை!

இவற்றுள் நோர்வேயின் பிரபல ஓவியர் முஞ்ச் இன் 'ஓலம்' ஓவியமும் இடம்பெற்றது. இவர் தெரிவுசெய்த ஓவியங்கள் சிலவற்றையே இங்கு காண்கிறீர்கள். இவர் தேர்ந்தெடுத்த இவ் ஓவியங்களைத் தொகுத்து " ஓவியத்துள் பெரியமனையாள் " என தலைப்புடன் புத்தகமாக வெளியிட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாக்சும் இரண்டாயிரம் ஆண்டுகளும்!

இன்று உலகறிந்த பெயராக மாறியுள்ளவர் கார்ள் மாக்ஸ். இவரால் படைக்கப்பட்ட மாக்சியத் தத்துவம், இன்று உலகெங்கும் உலகின் போக்கை, உலகின் வளர்ச்சியை விஞ்ஞான பூர்வமாக அறிந்துகொள்ள உதவுகிறது.

கார்ள் மாக்சின் 175வது பிறந்த தினம் இந்த வருடமாகும். அதேவருடம், இவரது மறைவின் 110வது வருடமுமாகும்.


கார்ள் மாக்ஸ் ஜேர்மனியின் ட்றயர் நகரில் பிறந்தார். இது ஜேர்மனியின் மூத்த நகராகும். ட்றயர் நகர் 1984இல் தனது 2000 ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. இந்நகர் ஒகஸ்ற்றஸ் என்பவனால் நிறுவப்பட்டது. இக்காலகட்டத்தில் நிறுவப்பட்ட நுழைவாயில் (Porta Negra) இன்றும் கம்பீரமாகக் காட்சி தருகிறது.

இந்த நகருக்கு உலகெங்கும் இருந்து, மாக்சின் சிந்தனைகளில் ஈடுபாடுடைய பலர் வருடாந்தம் வருகைதந்து, மாக்ஸ் வாழ்ந்த நகரையும் வீட்டையும் பார்த்துச் செல்வதுண்டு. மாக்ஸ் 1818இல் இந்த நகரில் பிறந்தார். பின் தனது 18வது வயதில் பேர்லினுக்கு வருகை தந்தார். இங்கு தன் இளமைக் கல்வியைக் கற்றபின் பேர்லினிலும், இங்கிலாந்திலும் தனது ஆய்வுகள், கல்வியை மேற்கொண்டு, உலகப் புகழ்பெற்ற மூலதனம் நூலை எழுதினார்.

1944இல் ட்றயர் நகர் கடும் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளானது. இந்த வருடம் (93) இங்கு கார்ள் மாக்சின் 175வது பிறந்ததினம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது.

**• கேசவன்**

www.tamilarangam.net



# குளிர வருகுது

**• தங்கம் •**

'ஐயையோ, நம்ம நாட்டுக்குள்ள குளிர் வந்திட்டுது. கோடை போச்சுது. இனி இலையுதிர்காலம் மரங்களைத் துயில் உரிச்சு நிர்வாணமாக்கிப் போடும். பகல் குறுகிக் குறுகிச் சின்னதாகிவிடும். இருள்தான் அதிகம்.'

துருவத்து நாடுகளில், இந்தக் காலநிலையும், ஒளியும் எமதுநாடு போல ஒரு சமநிலையில் இல்லாமல் கொஞ்சம் 'மக்கர்' பண்ணும்.

நோர்வேயும் வடதுருவ நாடுதான். இங்கு நீண்ட குளிர். அதாவது கிட்டத்தட்ட எட்டு ஒன்பது மாதங்கள் குளிர்தான். இரண்டு மூன்று மாதம்தான் நல்ல கோடை, வெய்யிலைக் காணலாம்.

நோர்வேச் சனங்கள் காலநிலையோடு மிகவும் ஒன்றிப் போனவர்கள். வெய்யில் என்றால் மிகவும் சந்தோஷப்படுவினம். வெய்யிலைக் கண்டால் அனேகமாக ஒருத்தரும் வீட்டுக்குள்ள இருக்கமாட்டினம்.

அனேகமாக நோர்வேச் சனம் ஸ்பெயின், கிறீஸ் என்று தெற்குப் பக்கமாக அடிக்கடி போவினம், வெய்யிலை அனுபவிக்க.

எங்கள் நாட்டில் ஆட்கள் 'மாரி பொய்ச்சுது' எண்டு சொல்லுவினம். அதுமாதிரி இங்கு இந்தவருடம் கோடையும் பொய்ச்சுப் போச்சு. கோடையின் பெரும்பகுதி குளிரும், மழையுமாகப் போய் எல்லா நோர்வேக் காரருக்கும் 'சப்'பெண்டு போச்சு.

என்னிடம் ஒரு வயோதிபப் பெண், 'எனக்கு 80 வயசு, இந்த எண்பது வருசத்தில இப்படியொரு மோசமான கோடைக் குளிரை நான் கண்டதில்லை.... ஏன் இப்படிப் போய்விட்டது? வருசத்தில் இந்த இரண்டு மூன்று மாதம்தான் வீட்டைவிட்டு நான் வெளியே போவதுண்டு. இம்முறை அதுவும் இல்லை.... இப்படி அடைஞ்சுகிடக்க வேண்டிக் கிடக்கிறது.' என்றார்.

வெளியில் பார்க்கிறேன், இலைகள் பழுத்துக் கொஞ்சம் மஞ்சளாயும், சிவப்பாயும், கருஞ்சிவப்பாயும் பலவர்ணத்தில் திடீரென மாறிக்கிடக்கு. இன்னும் சில நாளில் இலைகள் கொட்டி, மொட்டை மரமாகிப் போகும். இருட்டுத்தான் அதிகமாக இருக்கும்.

சில இளம் பெடியள் சொன்னார்கள், 'சீ என்ன இந்தமுறை 'சமர்' காவைாரிப் போட்டுது. அதால ஒரு பெண்களும் உரிச்ச உடுப்போட வெயில் காயேல்ல....' என்கினம்.

அங்க ஊரிலயெண்டா, வருஷம்

www.tamilarangam.net

முழுக்க ஓடித்திரியலாம். இஞ்சவந்து, இப்படிக் குளிருக்குப் பயத்தில அடைபட்டுக் கிடக்கவேண்டிக் கிடக்கு. இனி டீ.வி.யும், குப்பைத் தமிழ்ப் படங்களும்தான் வாழ்க்கை; விட்டால் நிறைய நித்திரை வரும். இனி எப்ப அடுத்த 'சமர்' எனும் கனவில் மூழ்கினேன்.

# தமிழர்கள் மூளைசாலிகள் தட்டிப்பறித்தது

தமிழர்கள் மூளைசாலிகள், கெட்டிக்காரர்கள். உண்மைதான். ஆனாலும் இப்படிச் சொல்லிச் சொல்லியே நாங்கள் மொக்கர்களாகிப் போனோமோ தெரியவில்லை. என்ன திடீரென இப்படி என நினைக்கிறீர்களா?

தமிழர்கள் கடும் உழைப்பாளிகள், மிகவும் எசமான விசுவாசிகள், வெள்ளையர்களுக்காக உழைத்து முன்னுக்கு வந்தவர்கள், முக்கிய பதவிகள் எல்லாம் நிரம்பி இருந்தார்கள். இவர்கள் எதையாவது செய்து கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்துவிடுவார்கள்.

ஆங்கிலத்தைப் படித்தோ, சிங்களத்தைத் தாமாகப் படித்தோ இவர்கள் முன்னேறி முக்கி, அரச பதவிகளை அலங்கரிப்பவர்கள்.

இதையெல்லாம் நன்கு பார்த்துவிட்டு, இவர்களைத் தந்திரமாக ஒதுக்க வேண்டும் என நினைத்தவர்தான் பண்டாரநாயக்கா. தனது 'நரி'மூளையைப் பிசைந்து பிசைந்து பார்த்தார். எப்படி இவர்களை ஒதுக்கி வைப்பது? இவர்களாக ஒதுங்கவைக்க வேண்டுமே என யோசித்தார். இறுதியில் கிடைத்தது ஒரு ஐடியா. 'கட்டாயம் சிங்களம் படி' என்றார்.

சும்மா என்றால் தானாகவே சிங்களம் படித்து முன்னுக்கு வந்துவிடுவான் தமிழன். ஆனால் கட்டாயம் சிங்களம் படிக்க வேண்டும் என்றவுடன், தமிழனுக்கு ரோசம் வரும். அந்தக் 'கட்டாய'த்தை எடு என்பிதிலேயே அவனது காலம் கழிந்துவிடும், சண்டைபிடிப்பான். பெரிய அரச பதவிகளைச் சிங்களவர் இலகுவாகப் பெறலாம். தமிழர்களைத் தந்திரமாக ஒதுக்கலாம் என்று 'பண்டா' நினைத்தார். அது இன்று சரியாகப் போச்சு. இப்ப சொல்லுங்கோ நாங்கள் மூளைசாலிகளா? சிங்களவர் மூளைசாலிகளா?

கஷ்டம் எண்டால்க் கஷ்டம். அப்படி ஒரு கஷ்டம். தமிழர்கள் இன்று மோசமான கஷ்டங்களை அனுபவிக்கினம். இது ஒன்றும் புதுவிஷயம் இல்லைத்தான். ஆனால் ஒன்று தெரியுமோ உங்களுக்கு?

அதுதானே! தமிழர்கள் இன்று சர்வதேச தரத்துக்கு வளர்ந்துவிட்டார்களே என்று ஒருபகுதியும், தமிழர்கள் கற்காலம் நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள் என ஒரு பகுதியும் நினைக்கவைக்குது நாட்டு நிலைமை.

www.tamilarangam.net

நான் என்ன சொல்றன் எண்டா, ஒரு ஆள் கொழும்பில இருந்து யாழ்ப்பாணத்திற்குத் தகவல் கொடுத்து அத்தகவலுக்குப் பதில் யாழ்ப்பாணத்தில் இருந்துவரக் குறைஞ்சது மூன்றுநாலு கிழமையோ, மாசக்கணக்கோ எடுக்குது. அதே ஆள் ஆயிரம் மைல்களுக்கப்பால் ஐரோப்பா, அமெரிக்கா, அவுஸ்திரேலியாவில் இருக்கிற ஆளோட ஒரு நிமிசத்தில தகவல் கொடுத்துப் பதிலும் எடுத்துவிடுவினம், அதாவது தொலைபேசியால். இது எப்படி இருக்கு?

## பத்துலட்சம் பெண்கள்

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் பேஏன்ற நாடுகளில் வருடம்தோறும் பத்துலட்சம் பெண்கள் இறப்பதாக அதிர்ச்சிதரும் தகவல் ஒன்றை யுனெஸ்கோ வெளியிட்டுள்ளது.

இதற்கு மேலாக தினமும் 35,000க்கு மேற்பட்ட ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் வறுமை காரணமாக இறக்க நேரிடுகிறது. இத்தொகையிலும் பெரும்பங்கு பெண்களே என அறிக்கை கூறுகிறது.

இன்று உலகம் முழுவதும் 88கோடியே 70லட்சம் பெண் குழந்தைகள்/சிறுமிகள் (15 வயதுக்குக் கீழ்) உள்ளனர். இதில் ஆறுகோடிப் பெண்குழந்தைகள் அடிப்படைக் கல்வியறிவு அற்றவர்கள்.

இதுமட்டுமல்ல, இன்று உலகில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களில் 2/3 பங்கினர் பெண்களே என்பது கவலைதரும் செய்தியாகும். மூன்றாம் உலக நாடுகளில் இந்நிலை மோசமாக உள்ளது.

வருடம்தோறும் ஐந்துலட்சம் பெண்கள் மகப்பேற்றின் மூலம் மரணம் அடைகிறார்கள்.

ஐந்துகோடிப் பெண்கள் வருடாந்தம் அதிக வேலைப்பளு, அதிக பிள்ளைப் பேறு என்பவற்றால் உடல்நலம் பாதிக்கப் படுகின்றனர்.

– மங்கை –

## வெளிவந்துவிட்டது!

## ‘கதிரேசனின் சிறுவர் பாடல்கள்’

ஈழத்தில் நீண்ட காலம் தமிழ் கற்பிப்பதில் தன்னை ஈடுபடுத்தித் தமிழ்ப் புலமைமிக்க பல மாணவர்களை உருவாக்கிய திரு.செ.கதிரேசர்பிள்ளையின் இலகுதமிழ், அழகுநடையில் முப்பது வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட தமிழ்ப் பொக்கிஷம்.

சிறுவர்களைக் கவரும் விதத்தில் அழகிய வடிவமைப்புடன் வெளிவந்துள்ளது. தொகையாகப் பெற்றுக்கொள்ளவோ தனிப்பிரதிகளைப் பெறவோ தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:


C.Adhavan,/Priorens gade 32, 1th,/5600 Faaborg,/Denmark.

* பிரதி ஒன்றின் விலை முப்பது குறோணர்கள் மாத்திரமே *

www.tamilarangam.net

# இரண்டு கதவுகள்

பஹ்றி ஏர்டிங்
மொழிபெயர்ப்பு: க.கலாமோகன்



இரண்டு நாடுகளில்
இரண்டு நகரங்களில்
இரண்டு கதவுகளால்
காலையிலே நான் எனது
வேலைக்குப் போவேன்...
இளைத்தும் களைத்துப்போயும்
மாலையிலே நான் வீடு திரும்புவேன்
இங்கேயுள்ள எனது கதவின் மீது
நான் தட்டுகின்ற வேளையில்
அங்கேயுள்ள கதவின் பின்னேயிருந்து
சிலர் சஞ்சலமடைகின்றனர்....
இங்கே என்னை முத்தமிடுபவள்
இப்படிக் கத்துகின்றாள்:
"அப்பா ! நல்வரவாகுக!"
அங்கே வெறுமையான கதவின்முன்
நட்டமரமாக நிற்பவள்
இப்படிக் கேட்கின்றாள்:
"நீ எப்போது வருவாய்?
அது எப்போது?"

பஹ்றி ஏர்டிங் (Fahri Erdinc), இவர் ஒரு துருக்கியக் கவிஞர். புகலிட இலக்கியத்தில் பொதுவாகத் தொடப்படாத அகதியின் இரட்டை வாழ்க்கையை இவரது கவிதை கருப்பொருளாகக் கொண்டுள்ளது. "இப்படி வாழுவது கஸ்டம்தான்" என "புகலிடம் மீது நூறு கவிதைகள்" தொகுப்பாளர் குறிப்பில் எழுதப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்